# தென்மொழி

## மானக்கொடி ஊன்றுக !

அடியெடுத்த ஆரியரால் ஆங்கிலரால் வடவரினுல்
அருந்தமிழர் பட்ட தீங்கைப்
படியெடுத்தே அளந்தாலும் பெருந்துலையால் நிறுத்தாலும்
பாரோர்க்குப் பங்கிட் டாலும்
துடிதுடித்த நெஞ்சளவில் துளிதீர்மோ? தமிழினத்தின்
துயர்தீர்மோ ? விடிவு நேர்மோ?
இடியெடுத்த நெஞ்சத்தீர்! மறக்குலத்தீர்! தமிழ்மானம்
இலங்குகொடி ஊன்று வீரே !

சுவடி: இ. ஓலை: க. கும்பம் (மாசி) ககககஅ




...த்தமிழ்
...க்கியத்
...களிதழ்

...காசு



# தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!


சுவடி-5 :: ஓலை-1

கும்பம் (மாசி) தி. பி. ௧௯௯௮ (1967–பிப்ரவரி)

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்:– தங்கப்பா
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1


## ஒப்போலை யாருக்கு ?

நம் நாட்டில் உள்ள குடியரசு, நூற்றுக்கு எழுபத்தைந்து கொடியரசே! (கொடிய அரசு என்றாலும் பொருந்தும்). இங்குள்ள மக்கள் நூற்றுக்கு எண்பது பெயர்கள் மாக்களே! (மாக்கல் என்றாலும் பொருந்தும்), தங்க வடிக்கைகளைத் தாங்களே உணராதவர் மிகப் பலர். எனவே எல்லாரும் சேர்ந்து தங்களுக்குள் ஒருவரைத் தலைவனாகத் டுப்பதில் எவ்வாறுவெற்றி காணமுடியும். குரங்குப் பட் ன்று தமக்குள் ஒரு தலைமையைத் தேர்ந்தெடுத்தால் அது

புலியாகவோ, அரிமாவாகவோ இருத்தல் முடியுமா? அ
குரங்காகத்தானே இருக்கும். முடியரசில் ஒரு பழமொழி
'மன்னன் எப்படி, குடிகள் அப்படி' என்பது அது. ஆனுல்
அப்பழமொழி, 'குடிகள் எப்படி, அமைச்சன் அப்படி' என்
பட்டு நிற்கும். ஆனுல் இஃதெல்லாம் மாந்தர் குலத்திற
வானதும் நம் அளவில் சிறப்பானதும் ஆன உண்மை!

நம் நாட்டின் அரசியல் நிலைமைபற்றியும், அவ்வரசி
தும் கட்சி நிலைகள்பற்றியும் நாம் அவவப்பொழுது எடுத்து
யிருக்கின்ருேம். அவற்றைத் தொடர்ச்சியாகப் படித்தவர்க
புதிதாகவும் தேர்தல் நெருங்கிய இந்த நேரத்தில் கழுக்
சொல்லப்போவது ஒன்றுமில்லை. எனவே தென்மொழியின்
அறிந்துகொள்ளும் புதிய நோக்காளர்க்கே ஒரு சில கூறி
படுத்தவேண்டிய நிலையில் உள்ளோம்.

நம் நாட்டின் குடியரசு அமைப்பு எப்படிச் சரியாக
வில்லையோ, அப்படியே தேர்தல் முறைகளும் சரியாக அமைய
இதை நாம் முன்பே கூறியுள்ளோம். ஆனுலும் இத்தகைய அ
குழப்பம் உள்ள இந்தத் தமிழகக் குட்டையில்தான் நாமும் 'ந
என்ற மீனைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நமக்குள்ள இ
கடமை இக்கால் நாம் தவிர்க்கமுடியாத ஒன்று. ஆகவே ஏதாவதொ
மீனை – ஓர் அமைச்சவையை நாம் தேர்ந்தே ஆகல்வேண்டும். எந்
மீனைப் பிடிப்பது

கட்சியமைப்பிலோ, அதன் தலைமைப்போக்கிலோ நம் நாட்டி
குத் தேவையான ஒரு நல்ல கட்சியோ, தலைமையோ வாய்த்துவிட்
தாக நாம் பெருமையுடன் கூறிக்கொள்ளமுடியாது. இங்கு
களில் பல ஏதாவது ஒன்றில் நூற்றுக்கு ஐம்பது எண் பெற்
ருென்றில் நூற்றுக்கு ஐந்து விழுக்காடுகூடப் பெறமுடியாம
திருக்கின்றன. அரசியலுக்குவேண்டிய பொதுவுணர்வுத்
காலத்தையும் கருத்தையும் ஒட்டிப் பல பிரிவுகளாகும். எவ்
லும் ஏதாவது ஒரு கட்சியாகிலும் அரசியல் தேர்வில் வெற்
விற்குத் தக்க எண்களைப் பெறுவதாக இல்லை. எனின்
கொள்ளிகளாக உள்ள இவற்றில் எந்தக்கொள்ளி நல்ல
ஊரைக் கொளுத்தாத கொள்ளி?

இந்நிலையில் இத்தேர்வுக்குப் போகும் தென்மொழி அன்
ஒரு சிலர்க்கு, அவர்கள் இருப்பவற்றில் சரியான ஒரு கொ

தேர்ந்தெடுக்க நாம் ஓர் எளிய வழியைக் காட்டுதல் மிகவும் கடினம். காரணங்களை முறையாக ஆயும் ஆய்வுகள் முன்பே நடத்தப்பெற்றன; பலநூறு சொல்லப்பட்டன. என்றாலும் ஓரிரண்டையேனும் கடைப்பிடித்தொழுகும் ஓரிருவரையேனும் - ஒரு கட்சியையேனும் நாம் தேர்ந்தெடுக்க வேண்டுமல்லவா?

தேர்தலுக்குப் போட்டியிடுவாரில் பெரும்பாலோர் அரசப் பதவிகளின் நாச்சுவைக்கே அங்காந்த வாயினர். மிகச் சிலரே பொது நோக்கிற்குத் தங்களை ஓரளவு உட்படுத்திக்கொண்டவர்கள். இக்கால் வழங்கப்படும் பங்கீட்டுக் கடைகளில் விற்கப்படும் அரிசிபோலவே, கல்லும் மண்ணும் கலந்த இக்கலவையில் நல்லாரைக் கண்டுபிடித்தல் அருமையினும் அருமை. கள்ளரெல்லாம் நல்லவர்போல் காட்சிதருவது இத்தேர்தல் காலத்தில்தான். இந்நேரத்தில் திருடன் வேறொரு திருடனைப் பிடிக்க மக்களுக்குத் துணைநிற்பான்! ஒழுங்கில்லாதவன், பண்புள்ளவர் சிலரொடு மேடைகளில் நடித்துக் காட்டுவான்; கொள்ளைக்காரன் தான் கொள்ளை அடித்த மூட்டை முடிச்சுகளை எல்லாம் அவிழ்த்துப் பொதுமக்களுக்கு வாரி வழங்குவான். கோமாளி அரசனின் உடையணிந்துகொண்டு மேடைக்கு வருவான். கலையென்ற பெயரால் சிலர் ஒப்போலைகளை விலை பேசிக்கொண்டு திரிவர். வழக்கு மன்றங்களில் பொய்யும் புரையுமாக வழக்காடும் வாய்கள் சில மக்கள் மன்றங்களில் உண்மைப் பறைகளை முழக்கிக்காட்டும். சிலரின் வாய்கள் நம் குழந்தைகளுக்குத் தாலாட்டுக்கூட பாடும். நம்மைப்பற்றி அக்கறையே இல்லாத சிலர் நம் அண்ணன் என்றும் தம்பி என்றும் உறவு கொண்டாடவும் வருவர். நம் அன்னையை ‘நாய்’ என்று எண்ணி இகழ்ந்தவர் சிலர் ‘தாய்’ என்று கையெடுத்துக் கும்பிடுவர். நம் மனைவி மக்களைக் கற்பழிக்கக் காலம்பார்த்துக் கிடந்த ஒரு சிலர் இக்கால் அவர்தம் கால்களில் விழுந்து ஒப்போலைக்காகக் கண்ணீர் வடிக்கவும், நா தழுதழுக்கவும் மனங்கூசார்.

இப்படிப்பட்டவர்கள் எல்லாரையும் நாம் உடனடியாகவும் தெளிவாகவும் இனங்கண்டுகொள்ள முடியாது. இத்தகையவர்களிடம் நாம் ஏமாந்துபோகாமல் இருப்பதே அருமையிலும் அருமை.

இப்பொழுதுள்ள அரசியல் அமைப்பின்படி எந்தத் தனி (அவர் நல்லவராக இருந்தாலும்) எந்தவகையான ஒரு நன்ம செய்துவிடமுடியாது. ஆகவே கூட்டு மொத்தமாக இய

கட்சியிடமே நாம் அரசியலை ஒப்படைப்பது முடியும். தனி ஒருவநு விட அவர் சார்ந்துள்ள கட்சிக்கே இக்கால் மதிப்பும் வலிவும் இருப் நால், நாம் இங்குள்ள கட்கிக் கொள்கைகளையே நன்முக ஆய்ந்து ஓரளவு சரியான கட்சியையே தேர்ந்தெடுத்தல்வேண்டும். இனி, கட்சி யென்பது தலைமையைப் பொறுத்தது. எந்தக்கட்சியும் நாம் விரும் பும் குடியரசு முறைப்படி அமைந்திருக்கவில்லை. ஆதலால், நாம் கட்சி யையும் கட்சித் தலைவர்களைப் பொறுத்தே பெரிதும் நம்பவேண்டி யுள்ளது.

அவ்வகையில் நம் நாட்டில் போட்டியிடும் கட்சிகளையும் அவற் றின் தலைவர்களையும் ஆய்தல்வேண்டும். அவ்வாய்வுக்குக் கீழுள்ள குறிப்புகள் பெரிதும் பயன்படும்.

(1) சட்டமன்ற அளவிலும், பாராளுமன்ற அளவிலும் தான் எண்ணியதைச் செயல்படுத்தும் வல்லமை.

(2) சரியான கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து செயல்படும் முறை.

(3) அரசியல் அளவில் உள்ள ஆற்றல்.

(5) மக்களைப் பொதுவுணர்வுக்கும், வளத்திற்கும் அழைத்துச் செல்வதில் உள்ள இடர்ப்பாடுகளைச் சமாளிக்கும் தலைமை.

இவற்றில் ஒரு நோக்காக நோக்கியிருக்கின்ற கட்சியமைப்பு எதுவோ அதுவே இந்தநாட்டை ஆள்வதற்குத் தகுதிவாய்ந்த கட்சி யாகும்.

இவையன்றி இன்றைய விலைவாசிகளின் நிலைகளையும் அரசின ரின் ஆளுமைவழியில், இடையில் உள்ள அதிகாரிகளால் ஏற்படும் சரிவுகளையும், தங்கள் கட்சி வெற்றிக்கு ஊன்றுகோல்களாகப் பயன் படுத்திக்கொள்ளும் எந்த ஒருதனி ஆளையோ, ஒருகட்சியையோ மக்கள் நம்பவேண்டா. எட்டி மரத்தை எவர் வீட்டுத் தோட்டத்தில் வைத் தாலும், அது கசப்பான பழங்களையே நல்கும். அதுபோல் நம் நாட்டி லுள்ள மக்கள் பண்படாதவரையில் எந்தக்கட்சி அரசுக்கட்டிலில் அமர்ந்தாலும் அதன் விளைவும் கசப்பாகத்தான் இருக்கும்.

...த்குக்காரணம் இதுநாள்வரை நமக்கிருந்த முன்னேற்ற ...தறைவே ஆகும். கல்வி, செல்வம் முதலிய எல்லா அடிப் ...களிலும் நாம் அடிமைப்பட்டுக் கிடந்தோம். இன்றுதாம் ...மானமும், தன்னறிவும் பெற்றவர்களாகவும் எண்ணிப் ...சயல் திறம் உள்ளவர்களாகவும் உருவாகி வருகின்றனர்.

இந்த நிலையில் நாம் நம் வளர்ச்சியை எந்தவகையினும் கெடுத்துக் கொள்ளுதல், மீண்டும் அறியாமை இருளிலேயே நம்மை அழுத்திக் கொள்வதாகும். நமக்கு முன் விரிந்த பாதைகள் பல. ஒன்றிற் பாதி வழிச்சென்று மீண்டு, மற்றொன்றில் தொடக்கத்திலிருந்து போவதை விடப், பிடித்த ஒன்றைத் திருத்திக் கொண்டுபோதலே ஓர் அரசியல் அமைப்பில் வெற்றி தருவதாகும். இவ்வாறு சொல்வது தமிழ்மொழியளவில், நாம் கவனம் செலுத்தாதது ஆகாது.

தமிழ் மொழியை இதுவரை எவரும் தூக்கி நிறுத்தியதில்லை. அது முன்பே வளர்ந்து முழுமையுற்றது. நாம் செய்ய வேண்டுவது அதன் பயனைப் பரவலாக்குவதே! இனி வருகின்ற அரசு எந்த அரசாயினும் தமிழ் மொழிக்குத் தீங்குசெய்து தப்பிவிடப் போவதில்லை இந்தி நுழைப்பை இனியும் மேற்கொண்டால் என்னென்ன விளைவுகள் நேரும் என்பதை ஆட்சியிலுள்ளார் கருதாமல் இரார். பக்தவத்சலங்கள் போன்ற ஓரிரண்டு புல்லியர் என்றும் இருப்பர். அவர்பொருட்டு நாம் ஒதுங்கிக்கொள்ளத் தேவையில்லை. அவர்போலியரை விலக்கி விட்டு மெய்த்தொண்டாற்றும் ஒரு சிலர்க்கு நாம் துணை நிற்பது நம்மை நாம் வலுப்படுத்திக் கொள்வதேயாகும். இதற்கு நாம் நாணவோ நடுங்கவோ தேவையில்லை! வடவரின் வல்லாண்மைக்குச் செவி சாயாமலும் பார்ப்பனரின் நரித்தன்மைக்கு இடங்கொடாமலும் இருந்து, தமிழக மலர்ச்சிக்கும் அதன் வழித் தமிழக விடுதலைக்கும் பாதை அமைக்கும் ஒரு கொள்கையே நமக்கு வேண்டுவதாகும். இக் கொள்கைக்கு எவர் துணையாக நின்றாலும் அவருக்கு உங்களுடைய ஒப்போலைகளைத் தூக்கி எறியுங்கள். நாம் சொல்வதெல்லாம் அந்த ஒப்போலைகளைவிட உங்கள் அறிவின்மேலும் வினையாற்றல்மேலும் நீங்கள் அளவற்ற நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதுதான்.

—பெருஞ்சித்திரன்.

# ஐந்தாம் ஆண்டு

'தென்மொழி' வழிச்செலவின் ஐந்தாம் ஆண்டுத் தொடக்கம் இது. படிப்படியாகத் 'தென்மொழி' புறத்தேயும் அகத்தேயும் வலிவை ஏற்படுத்திக்கொண்டு வருகின்றது. 'தென்மொழி'க்குத் தோற்றந் தான் உண்டு; இறப்பில்லை. தமிழ் உள்ளவரை, தமிழர் உள்ளவரை, தமிழகம் உள்ளவரை 'தென்மொழி' தன் செம்மாந்த பணியைத் தவறு

மலும், தயங்காமலும், தொடர்ந்தும் செய்ய ஏற்பாடுகளை அமைத்து வருகின்றேன். நாம் தொடங்கிய கடன் திட்டத்தால் பெற்ற பொருள் இதன் நிலைப்புக்குப் போதுமானதாக இல்லாமலிருப்பினும், வேறு பல தோன்றாத் துணைகளைக்கொண்டு தென்மொழி அமைப்பு நாளுக்குநாள் வலுப்பெற்று வருவதைத் தென்மொழியின் அகம் அறிந்த ஒரு சிலரும், புறமறிந்த நீங்களும் தெளிவாக அறியமுடியும்.

தென்மொழிச் செலவில் தொடக்கத்திருந்தவர் சிலர் தம் கைகளை நெகிழ்த்துக்கொண்டனர்; சிலர் கால்களைத் தடுத்துக்கொண்டனர்; ஒரு சிலர் உளத்திற்குப் பூட்டிட்டுக்கொண்டனர்; சிலர் அறிவுக்குத் திரையிட்டுக்கொண்டனர். இப்படித்தான் பெரும்பாலார் – நூற்றுக்குத் தொண்ணூற்றுவர் இருப்பர் என்று நான் தொடக்கத்திலேயே உணர்ந்திருந்தமையால், இவர்கள் தம் உள்ளமும் உரனும் வினையும் விதைப்பும் தளர்வுறத் தளர்வுற, நான் என் உள்ளத்தை இரும்பாக்கிக் கொண்டேன்; தோள்களைக் குன்றாக்கிக்கொண்டேன்; கால்களைத் தூணாக்கிக்கொண்டேன்; பார்வையை நேராக்கிக்கொண்டேன். இதனால் என் பக்கவாட்டிலும் முதுகுப்புறத்திலும், நெருக்கமாக – மிக நெருக்கமாக அசையும் எந்த அசைவிற்கும், வசைவிற்கும் நான் கருத்துச் செலுத்தாமல் தமிழ் ஒன்றே குறியாக, இறை ஒன்றே துணையாகப் பொதுமைப்பணிக்கு நடையிடத் தொடங்கிவிட்டேன். இனி, என் மனைவி மக்களே எனக்கு மாறாக நடப்பினும் நான் கவலைப் படேன். அந்நிலைக்கு என்மேல் உள்ள எல்லாக் கட்டுகளையும், தளைகளையும் வெட்டித் தகர்த்துவிட்டேன். அன்போ, நட்போ, உறவோ, நொதுமலோ, பகையோ எதுவும் என்னை இனிக் கட்டுப்படுத்தாது, நான் பொதுவன்; என் உடலிலுள்ள ஒவ்வோர் அணுவும் பொது; என் எண்ணம், எழுத்து, வினை, விளைவு அனைத்தும் பொது.

என்னுடன் எவரும் சேர்ந்துகொள்ளலாம்; என்னைவிட்டு எவரும் பிரிந்துபோகலாம்; என்னோடு எவரும் நட்புச்செய்யலாம்; பகை பாராட்டலாம். ஆனால் அந்நிகழ்ச்சிகளால் என் உள்ளம் மகிழவோ, துன்புறவோ போவதில்லை.

கடந்த காலங்களில் தென்மொழிக்குத் துணை நிற்பதாக வந்தவர் சிலர்; தொண்டாற்றுகின்றேன் என்று இணைந்தவர் சிலர்; உதவுகின்றேன் என்று உரைத்தவர் சிலர். ஆனால் அவர்கள் தென்மொழியிலிருந்து அள்ளிச்சென்றது ஏராளம்; அன்பு என் கண்களை மறைத்தது; நட்பு என்னைக் குருடாக்கியது. வந்தவர்களில் சிலர் விருந்துகளில்

முதலிடம் தேடினர்; சிலர் அமர்தற்கு இருக்கைதேடினர்; சிலர் படுக்கப் பாய்தேடினர்; சிலர் அறுப்பதற்கு அரிவாளொடு வந்தனர்; சிலர் கட்டிக்கொள்ள கயிற்றுடன் விரைந்தனர். ஆனுல் அவர்கள் எல்லாரையும் நான் தூக்கச் சொன்னது மண்வெட்டியை; பிடிக்கச்சொன்னது ஏரை; பிடுங்கச்சொன்னது களையை! இவ்விளைப்பாடுகளால் கைசலித்தனர் சிலர்; உளஞ் சலித்தனர் சிலர்; சிலர் சொல்லிக்கொள்ளாமல் நழுவிப்போயினர். ஆனுல் அப்படிப் போனவர் எல்லாரும் அவர்தம் நெகிழச்சிக்கு என்னையே காரணமாகக் கூறிவிட்டு நகர்ந்தனர். தன் சோம்பலை இறைவன்மேல் சாற்றி உழைக்காமல் திரிகின்றனே மாந்தன்; அப்படி!

எல்லார்க்கும் இசைந்தவனுக அவர்கள் என்னை மாற்ற முயன்றனர். மாற்ற இயலாதபொழுது தோற்று ஓடினர். ஆனுல் அவர்களில் ஒவ்வொருவரும் தம்தம் நிலைகளை நமக்காக மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. தனிப்பட்ட நிலையில் அவர்களின் போக்கிற்கு அவர்கள் தங்களையே மாற்றிக்கொள்ளாதபொழுது, பொதுவாக இயங்கும் என்னை வளைக்க இவர்கள்முயன்றது எனக்கு உள்ளூர நகைப்பைவிளைவித்தது.

பொதுத்தொண்டு என்பது இருக்கின்ற நிலையின்மேல் ஏறி, இருக்கவேண்டிய நிலையை அமைப்பது. நடக்கின்ற பக்கமெல்லாம் புல்வெளியே விரிந்திருக்குமென எதிர்பார்ப்பவன் பொதுத்தொண்டை நோக்கி இறுதிவரை நடையிடமுடியாது. எல்லாரும் தனக்கு இசைவாக நடப்பார்கள் என்று எண்ணுபவன் பொது நினைவிற்கு அப்பாற்பட்டவன். தன் விருப்பு, வெறுப்பு நிலைக்கு அடிமையாகாமல் - தனக்கென்ற தனி நினைவு ஒன்றில்லாமல் பொதுநிலைக்குத் தன்னை அடிப்படுத்திக்கொள்பவனே பொதுத்தொண்டுக்கு ஏற்றவன். அவன் கழுதைபோல் சுமக்க முன்வரவேண்டும்; நாய்போல் அலைபவனுகவும், மாடுபோல் உழைப்பவனுகவும், பன்றிபோல் எதையும் தின்பவனுகவும், எருமைபோல் எங்கும் படுத்துக் களைப்பைப் போக்கிக் கொள்பவனுகவும் இருத்தல்வேண்டும். அரசனுக இருக்க விரும்புபவன், கழுதையாகவும், நாயாகவும், மாடாகவும், பன்றியாகவும், எருமையாகவும் இருக்க விரும்புவானு?

இவ்விடர்ப்பாடுகளால் தென்மொழி தன் நிலையில் குன்றிவிடாது. வலிவு மிக்கது மெதுவாகத்தான் நடையிடும். இதன் ஆற்றலைத் தென்மொழி அன்பர்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். பிறபின்.

—பெருஞ்சித்திரன்.

# இதுவுமொரு பிழைப்பா?

பாவேந்தர்-பாரதிதாசன்

கையிற் பெற்ற பதவி பெரிதா! – இனம்
காட்டிக் கொடுத்த பழி சிறிதா
சொல்லேடா (கையில்)

பையிற் பெற்ற பணந்தான் பெரிதா – இனப்
பகைவனைச் சேர்ந்த பழி சிறிதா
சொல்லேடா (கையில்)

பார்ப்பானைப் பிராமணன் என்றாய் – நீ
பதவிக் கவன் வீடுசென்றாய்;
தீர்ப்புக்கு வாய்பார்த்து நின்றாய் – நீ
செந்தமி ழர்மாண்பைக் கொன்றாய்!
சொல்லேடா (கையில்)

தமிழர்க் குழைப்ப தாய்மொ ழிந்தாய் – பின்பு
தன்மான மேகெட்ட ழிந்தாய்
உமிழ்பவன் வீடுநு ழைந்தாய் – நீ
ஊரில் நாயினும்இ ழிந்தாய்!
சொல்லேடா (கையில்)

தமிழர் இழப்பு கொஞ்சம் இழப்பா? – பகை
தழைப்பது கொஞ்சம் தழைப்பா?
தமிழனை சாக உழைப்ப துழைப்பா?
தரம்கெட்டாய் இதுவும்ஓர் பிழைப்பா?
சொல்லேடா (கையில்)

# நூருசிரியம்

**துரை-மாணிக்கம்**

## மு ன் னு ரை

'நூருசிரியம்' எனும் இந்நூல் நூறு ஆசிரியப் பாக்களைக் கொண்டது. ஆசிரியப் பாக்கள் அகவற்பாக்கள். ஆசிரியம் என்பது யாப்பையும் அகவல் என்பது ஓசையையும் குறிக்கும். ஓசையால் பெயர் பெறுவது ஆசிரியம் ஒன்றே. 'சீர்சால் அகவல்' எனும் சிறப்புறப் பேசப் பெறுவதிப் பா வகை. இப்பாவகை 'ஆசிரியம்' எனப்படுவதால் இதன் தலைமைநிலை விளங்கும். பழஞ் செய்யுட்களுள் இதுவே பெரும்பான்மையாக நிற்கும் பா வகையாம். எளியார்க்கு எளியதும் வலியார்க்கு வலியதுமானது இப் பா வகை, தமிழ்யாப்பு முறையில் முதல் தோற்றமாகவும் இருத்தல் வேண்டும் என்றும் கருதற்பாலது.

'தென்மொழி' முதன் முதல் தொடங்கப் பெற்று இடை நின்ற ஓராண்டுக் காலத்து எழுதப் பெற்ற பாடல்கள் இவை. கிடைத்த ஓய்வு வீணே கழிய ஒருப்படாத என் உணர்வுள்ளம் இந்நூலின்கண் நின்று திளைத்தது என்று கூறின் மிகையாகாது.

பாகுபாடின்றி அவ்வக்கால் எழுந்த உணர்வுகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி எழுதப் பெற்றது இந்நூல். உண்மையும் திண்மையும் வாய்ந்த கருத்துகளை யாவரும் அறிதற் பொருட்டு இந்த யாப்பைத் தேர்ந்தெடுத்தேன். பாத்தளைகளால் பெரிதும் கட்டப்பெருமல் சிறு சிறு சீர்களால் தொடுக்கப் பெற்ற பாவடிகள் நிரம்பிய வாகலின், இப்பாக்கள் அருமுயற்சியின்றி ஐந்தாறு முறை படித்த அளவிலேயே மனத்தகப்படுக்கும் தன்மை வாய்ந்

தவை. இவற்றின் பிறசிறப்புகள் படிப்பாரின் உணர்வுக்கும்அறிவுக்கும் கண்ணேட்டத்திற்கும் உரைகற்களாக நிறுத்தப்பட்டன.

நூறு பாக்களும் வேறு வேறு கருத்துகள் பற்றி யியங்குவன. அவை அறிவியல், உலகியல், வாழ்வியல் என்னும் பகுப்பில் அடங்குவன. நூல் வடிவில் வெளியிடப் பெறுங்கால் இப் பாட்டுகள் இம் முப்பகுப்புகளாக வெளியிடப் பெறும். அதுகால் முன்னுரையும் விரித்து எழுதப் பெறும்.

ஆனல் தாளிகை நலங்கருதியும் படிப்பார் சுவை கருதியும் ஈண்டு வெளியிடப்பெறும் முறை வேருக அமைக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்குப் பொழிப்பும் விரிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன தமிழ்நலம் நாடுவோர்க்கும், இலக்கியநயந் துய்ப்பார்க்கும் அவை பெரிதும் துணையாக விருக்கும். புரையும் கறையும் நிறைந்த போலி இலக்கியப் படைப்பு மிகுந்த இக்காலத்து, நிறையும் விரையும் கலந்த இத்தகைய நூற்கள் வாழ்க்கைக்கு ஒளியும் வழியும் காட்டுவன என்பதைப் படிப்பார் தெள்ளிதின் உணர்வர்.

பாடல் – க

ஒன்றிறை; உலகம் உண்டதன் வழியே.
நன்றிதன் வாழ்க்கை; நாமதன் மக்கள்.
காட்சியுங் கேள்வியுங் கருதலும் புரிதலும்
ஆட்சியுட் பட்ட, அளவி னனே !
மீட்சியின் றெழுகி யவைதிறங் கடவார்
மாட்சிமைப் பட்ட பொருளறி யாரே !
மன்னி யுலகெலா மலர்த்தவிப் பானை
முன்னி யுணர்ந்த வுணர்விளுர்க் கல்லதை
வகுத்த அறிவொடும் வழக்கொடுங் கூடிப்
பகுத்தாய் வார்க்குத் தொகுத்தவை விளங்கா.
உள்ளதன் நாளே, உன்னி யுணர்மின் !
தெள்ள வுணர்ந்தவன் தேர்ந்து தெளிமின் !
கொள்ளுமின் ஆங்கவன் கொடையே; கொண்டு
கொடுமின் அவன்றன் குற்றுயிர்க் கெல்லாம்;
எள்ளுமின் உள்ளம் இகழ்வன; இகந்து
தள்ளுமின்; தள்ளித் தனித்தவன் திறலொடு
பொருந்துமின்; வாழ்க்கை பொன்ரு தாரே !

பாட்டு 1.

பொழிப்பு : ஒன்றே இறை; இவ்வுருள் நிலம் அதன்வழி உண்டாமாறு நின்று இயல்வது. வாழ்நிலை உயிர்கள் யாவினுக்கும் அஃது ஒட்டி நின்று இயங்குநிலை நன்று. அத்தகை வாணிலை உயிர்களுள், பொறியும் புலனும் ஆகிய ஐயறிவால் நிறையப்பெற்று மெய்யறிவால் விளங்கப்பெற்ற நாமாகிய மேனிலை உயிர்கள் அதன் தலைப்பிறவிகள். அவற்றிற்குக் காணுதலாகிய காட்சியும், கேட்டலாகிய கேள்வியும் இவ்விரண்டின் வழி விரியப்பெற்று இவ்வியக்கத்திற்குக் கருவாகிய கருத்தும், அதன் வழித்தோன்றி அவைவழிப் படுக்கும் வினைகளும், ஓர் எல்லையுட்பட்ட ஆளுகைக்குரிய. அவ்வெல்லை யாவற்றினுக்கும் பொதுவினது.

அப்பொதுவினதாகிய எல்லைக்கண் நின்று இயங்கும் இயக்கத்து மீளாது நின்று ஒழுகி,அவ் வளவும், ஆட்சியும், வினையும், கருத்தும் கேள்வியும் காட்சியும் மக்களும் இயக்கமும் உண்மையும் உலகும் ஆகிய நிலைகளுள் ஒன்று நிலைகடந்து பிறிதுநிலை காணும் பெற்றியோர் அன்றிப் பிறர், பெருநிலைப்பட்ட ஒன்றாகிய மெய்ப்பொருளை அறியமாட்டுவரல்லர். நிலைப்பெற்று நாம் இயங்கும் இவ்வுருள்நிலப் போன்ற எல்லாவற்றையும் மலர்த்தி அவிக்கும் தன்மையின் ஆகிய அம்மெய்ப்பொருளை நோக்கி உள் நின்ற வல்லுணர்வு அத்தகையனுர்க்கன்றி,அவ்வெல்லைக்குள்ளும் வரையறைப்பட்ட ஐயறிவொடும், அவை அடித்தாய உலகின் புறத்து நிலையொடும், அத்தகையராகிய பிறரொடும் ஒன்று இருந்து, வேதியில் விளங்கியல் முதலிய பொருள் பாகுபாட்டையும், உடலியல், உயிரியல் முதலிய மெய்ப்பாகுபாட்டையும், உளவியல், அளவியல் முதலிய உயிர்ப்பாகுபாட்டையும், மண்ணியல், விண்ணியல் முதலிய புடவிப் பாகுபாட்டையும், இணைப்பின் நீக்கித் தனித்தனி ஆய்ந்து பார்ப்பார்க்கு, அவை முற்றும் ஒன்றுபட்டு, அவ்வொன்றுபட்ட வழி, ஒரு புதுநிலை தோன்றி வெளிப்படுமாறு தொகுப்பாகநிற்கும் அவையும் அதுவும் விளக்கமுறத் தோன்றுவாம்.

இவை இங்ஙனமாக, இவ்வுலகத்தலைநிலை உயிர்களாகிய நீவிர் நுங்கட்கு எல்லைத்தாய நாளைக்குள்ளேயே நும்நிலை ஊன்றி

நல்லுணர்வில் நும்மைப் பொருத்துவீராக! அது வழித்தெளி வின் உணர்ந்து அம்மெய்ப்பொருள் நிலையினை இறுதி எனத் தேர்ந்து மயக்க மறுவீராக! நுமக்கு இவ்வுலகின்கண் வந்து வாய்த்தவெல்லாம் அப்பொருள் நுமக்கு இரவாமலே கொடுத்த ஈகை எனக் கருதுவீராக; ஆங்குப்பெற்ற அவ்வீகப்பொருளை நும் ஆட்சிக்குட்பட்டவாகிய குறுகிய காட்சியும் உயிரும் மெய்யும் பொருந்திய உயிர்க்கெல்லாம் நீவிரும் இரவாமுன ஈகுவீராக! ஒருவழிப்படா நிலையில் நும்வழித்தாகி, ஒருவழிப்பட்ட நிலையில் அம்மெய்ப்பொருள் வழிநிற்கும், நும் உயிர் மெய்யுட் பொருந் தியதாகிய உள்ளம் ஒதுக்குவனவற்றைப் பற்றுக்கோடாது இகழ்ந்து, தொடர்பற நுமக்குத் தொடர்பேற்படாதவழி புறத்தே தவிர்ப்பீராக; தவிர்த்தநிலையில் தொடர்பற்று நும்போலவே முழு ஆற்றலொடு முன்னமேநிற்கும் அம் மெய்ப்பொருளோடு நீவிரும் நும்மைப் பொருத்திக் கொள்வீராக; இவ்வுலகம்போலும் ஒன்றின் சுழற்சி யியக்கத்துட்பட்டு உயிர் தேய்ந்துபோகாத நல்லறிவி னோரே!

விரிப்பு: 'ஒன்றே' என்றதால் முதலும் முடிவும் அற்றது; தலை யாயது; இரண்டு மூன்று என்ற எண்ணுப் பொருளற்றது; தனிநிலை யானது; ஒன்றின் விரிவே பலவும் என்றாகி, பலவின் முடிவே ஒன்று என்றாகும் அழற்சியின் இயல்வது என்க இஃது இன்மைக் கொள கையையும் பன்மைக் கொள்கையையும் மறுத்தது.

'இறை' என்றது 'இறுத்த நிலையது' எனற்கு. இறுத்த நிலை இறுதிநிலை. இறு–ஐ. முடிவும் தலைமையும் வாய்ந்தது. தலைமை முதல்நிலை. ஒன்று காரண நிலை; இறை கருமநிலை.

'உலகம்' உருள் நிலை கொண்ட ஓர் அகம். உல + அகம். அகம். அகப்படுத்தி நிற்பது. உலத்தல்–அழற்சியுடைமை. உருளல் தன்மை.

'உண்டு' இல்லையென்பார்க்கு மறுப்பு. தேற்றம். கருது பொரு ளாகிய ஒன்றுக்குக் காட்சிப் பொருளாய் நின்று 'உலகம் உண்டு' என்று காட்டியது.

'அதன் வழி' என்றது அவ்வொன்று வழியாய் நிற்றலை. நிலை யும் இயக்கமும் அதன் வழியாம் என்றவாறு.

'நன்று' - தொடக்கமும் முடிவும் நன்மைக்கென்றவாறு. என்னை? துன்புந் துயரும் நன்மைக்கோ என்பார்க்கு, துன்பந்துயரும் அதன் வழித்தாய அல்ல என்றும், உயிர் போங்குநிலையின் ஏற்றத்தும் இறக்கத்தும் நின்றும் சுழன்றும் செல்லல் தோற்றமே என்க. துன்பும் துயரும் மனக் கோட்டமே! துன்பம் சூழலால் வந்துற்ற தாக்கு நிலை; துயர் உயிர் சூழற்கு உட்பட்ட தாங்குநிலை. துன்பு புறப்பாடு. துயர் அகப் பாடு. இவ்விரண்டும் கோட்ட நிலையால் உயிர்க்கு அசைவு நிலை தரினும், அவ் வசைவு நிலையும் முடிவுகருதி இன்பமே ஆகும்! என்னை? துன்பம் உயிர் தன்னை உணரு நிலை; இன்பம் உயிர் தன்னை மறக்கு நிலை! இவையே உயிர் வயங்கு நிலையும் உயிர் மயங்கு நிலையுமாம்.

'இதன் வாழ்க்கை' – அதன் வழித்தாய வாழ்க்கை. ஒன்று வழி உலகும் உலகு வழி வாழ்வும் அமைவதாம் என்க.

'நாம்' – அறிந்து உணரத்தக்கவராகிய நம்மை உட்படுத்தியது.

'அதன் மக்கள்' – அவ்வொன்றின் வழித்தாய மேனிலை உயிர்கள்.

'காட்சியும் கேள்வியும் கருதலும் புரிதலும்' – உயிர்த் தோற்றத்து முதல் விளக்கம் காட்சியறிவே! என்னை; உயிர்த்த உயிர் காட்சியின் பாற்பட்டே அறிவை வழிப்படுத்தும். கண்ணிற்பட்ட காட்சி அவ்வுயிர்க்கு அறிவின் முதல் படிவு. அதன் பின் கேள்விவழிச் செயல்படுகின்றது. இவ்விருவழி யறிவும் விரிந்த பின்னரே மகவு கருதுதல் செய்யும். கருதுதலின் விளைவாய்ப் பிறந்த கருத்து வெளிப் படுதலே மொழி. ஈண்டு மொழியைக் குறிக்காதது அதன் அடிநிலை யாகிய கருதுதல் குறித்தமையால் - என்க. 'புரிதல்' காட்சிக்கும் கேள்விக்கும் கருத்துக்கும் உடலுறுப்புகளைப் பயன்படுத்தல். உயிரின் மெய்யியக்கம் முன் மூவகை அறிவின் பின்னரே தோன்றுகின்றது. அதுவரை மகவு இயங்கும் இயக்கம் மெய் உயிரை இயக்கும் இயக்கம். என்னை? மெய்ப்பசி தோற்றத்து மகவு அழுங்கலும், மெய்ப்பசி யடக்கத்து மகவு நகை விளங்கலும் உயிரையியக்கிய மெய்யியக்கம் என்க.

'ஆட்சியுட்பட்ட அளவினனே' – ஆட்சி–ஆளுகை ஆட்சியுட்பட்டது–ஆளுகைக்கு உட்பட்டது. அளவினனே–அளவினுல் தோன்றுவது. முற்கூறப்பட்ட செயல்கள் யாவும் உயிர்கட்கு இயற்கையாந் தன்மையினுல் வரையறுக்கப்பட்ட அளவினது. என்னை? காட்சிக்கும் கேள்விக்கும் காலமும் இடமும் எல்லை என்க; கருதுதலுக்கு ஐயறி

வியக்கத்தாற் பட்ட அறிவு எல்லை என்க; புரிதல் – அவ்வறிவால் இயக்கப் பெற்ற மெய்யின் வினை. அதற்கு மெய்யின் வலிவும் அளவும் எல்லை என்க. இவ்வளவின் உட்பட்ட அறிவு செயல்படற்கும் மனமே எல்லை என்க. என்னை? மனம் வட்டாடும் பலகை போல்வது. அறிவு வட்டுப் போன்றது. அறிவுக்கரணமாகிய ஒத்த ஐம்புலன்களும் ஆடுநர் போன்றது. வாழ்க்கை ஆட்டம் போன்றது என்க. இதில் வேறலும் தோல்வியும் ஆட்டத்தின் பயன் போன்றது. அதில் வரும் இன்பும் துன்பும் நிலையற்றது. என்னை அவ்வின்பாலும் துன்பாலும் மெய்ப் பயன் ஒன்றும் விளையாமையால். மெய்யே பயனுருக் காலத்து உயிர்க்கு ஒரு பயனும் இல்லை என்றவாறு.

மீட்சியின்றெழுகல் : அவ்வளவு நிலைகளைக்கடந்து ஒழுக இயலாத தன்மையின் நிற்றல்.

அவைதிறம் கடவார் : அவைப்பட்ட எல்லை நிலைகளைக் கடக்கப் புணையற்றவர். புணை - மெய்யறிவு. 'ஐயுணர் வெய்தியக்கண்ணும் பயமின்றே' மெய்யுணர் விலாதவர்க்கு' எனும் திருக்குறளை ஓர்க.

மாட்சிமைப்பட்ட பொருள் : மாண் - பெருநிலை - பெருமை, மா - பெரியது. அண் சாரியை அண்ணித்து நிற்றலாகிய தன்மை, அண்ணித்தல் - ஒன்றல் - பொருந்தல் - வேறற்றநிலை. ஒன்றிய - நிலையில் இயங்கும் பெரும்பொருள்.

அறியார் : அறிவினுன் அறியவியலார்.

பன்னுதல் : நிலைத்தல். ஒன்றிநிற்றல்.

உலகெலாம் : இவ்வுருள் நிலம்போன்ற உலகங்கள் எல்லாம். என்னை? கோளுங் கதிரும் உடுவும்புடவியும் என்றபடி.

மலர்த்து ; விளங்கச்செய்து, விளங்கல் - தோன்றல்.

அவிப்பான் : அவித்தல் செய்வான், மலர்த்துத் தொழிற்கு இறுதி.

முன்னுதல் : மூண்டு நிற்றல். முன் - பகுதி. மூள்ளல் - முண்ணுதல் - முன்னுதல்.

உணர்தல் : உள்ளறிதல். அறிதல் புறமும், உணர்தல் அகமும் என்று உணர்க.

அறிதல் : மூளையின்பாற்படுவது. உணர்தல் உள்ளத்தின்பாற் படுவது.

உணர்வினுர்க்கல்லதை : உள்நின்று அறியும் தகவினுர்க்கன்றி:

வகுத்த அறிவும் வழக்கும்; வகுக்கப்பெற்ற அறிவுத்துறைகளால் பெற்ற ஈட்டமும், அவை ஒன்றுக்கு ஒன்று பொருந்துவதாகிய வழக்கும். என்னை - பூதநிலைபற்றி ஆயும் வேதியலும் பொருள்நிலைபற்றி ஆயும் விளங்கியலும் மாறுபடாவழி மண்ணியலொடும் விண்ணியலொடும் பொருத்திப் பார்க்கும் ஏரண வழக்கு.

கூடி: அவ்வத்துறைபோகிய அறிவினர் பலருங்கூடி ஒன்றுபட்டு.

பகுத்தாய்தல்: பூதநிலைகளையும் பொருள்நிலைகளையும் பாகுபாடுசெய்து இயக்க இருப்பை அறிதல்.

தொகுத்தவை: அப்பகுப்பில் விளங்காது. தொகுப்பில் விளங்காநிற்கும் கருப்பொருள் உண்மைகள்.

விளங்கா: விளக்கமுறத் தோன்றா. அறியப்படமாட்டா.

உள்ளதன்நாள்: உயிர் மெய்யொடு பொருந்தி உளவாகிய இயக்க எல்லை. வாணாள்.

உன்னி: அழுந்தி.

உணர்மின்: உள்ளறிமின்.

தெள்ள: கசடு அடித்தங்கி அறிவுதேங்கி நிற்குமாறு.

உணர்ந்து, அவன் தேர்ந்து: உள்நின்று நோக்கி அறிந்து அவனாகிய மெய்ப்பொருளே மூலகாரணன் என உட்கொண்டு.

தெளிமின்: தெளிதற்கு முனைமின்.

கொள்ளுமின் ஆங்கவன் கொடை: அன்றே நம்மையும் நமக்காக ஐம்புலக் கருவிகளையும், அவை மேயும் உடலையும் - அஃது ஊர்ந்த உயிரையும் அஃது உலவ உலகங்களையும் நாம் விழையாக் காலத்தே நமக்கு ஈகமாகத் தரப்பெற்ற அருளை.

கொண்டு கொடுமின்: கொள்ளுதற்போலும் கொடுமின்கள். அளவிடப்பெறாத செல்வங்களையும் அவற்றைத் துய்க்க அளவிடப் பெறாத அறிவுணர்வையும் கேளாமலே கொடுத்த கொடையைப் பெற்றதுபோல் பிறர்க்கும் கொடுமின்கள் என்றவாறு. என்னை? நம் போலும் எல்லவர்க்கும் ஈத்த கொடைக்கு மேலும் நாம் ஈதற்கு நமக்கு என்ன ஆற்றலுள்ளது என்று அடக்கவுரை செய்யும் சான்றோரும், என்ன பொருளுள்ளது என மடப்பவுரைசெய்யும் மடவோரும் வினவெழுப்ப இது கூறியதென்னை எனின்; கூறுதும். நிலையாலும் நினைவாலும், வினையாலும் வாய்ப்பக்கிடந்த எல்லாப் பொருளும் இவ்வுலகத்து எல்லார்க்கும் ஒப்பக் கிடைப்பதும், அவ்வாறு கிடைத்துழி

அவ்வெல்லவரும் அவற்றை நுகர்தல் இயல்வதும் அரியவாகையால், ஒருபால் தொட்ட ஊற்றுநீர் பிறக்கும் மடுப்ப உரிமைபோல், அவன் பாற் கொடையாகப்பெற்ற இவ்வுலக உடைமை இங்குள்ளார் யாவர்க்கும் ஒப்பக்கொடுக்கும் உரிமை உடையது. என்னே? வலக்கை பெற்றது இடக்கையும் எடுத்து உண்ண உரிமை உடையதுபோல் ஒருடற் பல்லுறுப்பாய் இயங்கும் இவ்வுலக உயிர்கள் யாவையினுக்கும் ஈண்டொருவற் பெற்ற ஈட்டம் என்க.

அவன் குற்றுயிர்க்கு எல்லாம் : அம்மெய்ப்பொருள் வழி முகிழ்த்தலர்ந்த குற்றுடலும், குறைபுறுப்பும், குற்றறிவும், குறுவிளைவும் குறுவாழ்வும் வாய்ந்த உயிர்கள் தொகை யாவினுக்கும்.

எள்ளுமின் உள்ளம் இகழ்வன : இவ்வுடற்கண் நின்று நிலவும் உறுப்புகளுக்கெல்லாம் உள்ளுறுப்பாய் நின்று, மெய்ப்பொருளின் தேக்கிடமாய் இயங்கும் உள்ளம் சிறுமை கருதியும், வெறுமை கருதியும், இகழ்ந்து ஒதுக்குவனவற்றை நீவிரும் இகழ்ந்து விடுமின்கள் என்றவாறு.

இகந்து தள்ளுமின் : பழித்து, நும் பற்றினின்றும் விடுவியுமின்கள். இகத்தல் - பழித்தல் - கடந்து மேற்செல்லல் - விட்டுப் புறம் போதல் - வெறுத்துத் துறத்தல்.

தனித்தவன் : தன்வயம் நின்றவன் - பிறர் அசைவுநிலைக்கு வயபபடாதவன் - ஒன்றன் - ஒருபெருந் தனிப்பொருள்.

திறல் : வலிமை - மெய்யறிவு - மேன்மை.

பொருந்துமின் : இரண்டன்மை நிலையில் இணையுமின்கள் - அவனுக நின்று நடத்த நம்மை ஒப்புவிப்பது – நம்செயல் கழலுதல்.

வாழ்க்கை பொன்றுதார் : வாழ்வாம் எனப்பட்ட இயங்குநிலை. சிதையாத எண்ணமுடையவர்கள்.

இப்பாட்டு, இறையுண்மையினையும், அதையுணரும் வழியையும், அதனை அறிந்த நன்மையையும் அத்நன்மையால் விளையும் மலர்ச்சியையும் கூறுநிற்கும், நிலைமண்டில ஆசிரியப்பாவாம்.

இது பொதுவியல் என்திணையும், இறைநிலை வாழ்த்தென் துறையுமாம்.

(வளரும்)

# இயற்கையாற்றுப் படை

உம்பர் நெடுஞ்சினை இருப்பைப் புழைகரந்து
பம்புறு சங்கின் செம்போத் தொலிக்கும்
நன்னுறி மண்டிய கருந்தூர் உயர்பனை
ஆற்றறல் ஒழுக்கின் அணிவரை இரும்புறத்(து).
உறழ்தோட்டுப் பீர்க்கின் பசுங்காய் உரிஞ்சிச்
சிறார்கடித் துண்ணுஞ் செழும்புனல் கடந்தும்,
புயல்வளம் பழிச்சிய புதர்ப்புல் ஆர்ந்து
பெயல்தேங்கு சின்னீர் பெற்றம் அருந்திக்
கடம்புநிழல் வதியும் தடம்பல கடந்தும்;
மேய்குணில் தந்த கொழுங்கனி யுண்டு
காய்கவர் இலந்தை கவணிடைத் தெறித்தே
ஆயர் சிறுவர் ஆடிடங் கடந்தும்,
ஓலைக் கொட்டத் துள்ளிடு தசும்பின்
தயிர்கொடு மாறி மலைநெற் கொணரும்

பயில்மொழி ஆய்ச்சியர் எதிர்வழி கடந்தும்,
அறையும் பொறையும் பரீஇய தோன்றவும்
அவல்படு நன்னிலம் மிசைபெற் றோங்கவும்
அகலிலைத் தேக்கொடு கோங்கம் செறியவும்
தொகுவண் குறிஞ்சி தோன்றும் மன்னே !

குறவர் கதநாய் குரையொலி மடுத்துச்
சிறுநரி ஒளிக்கும் கன்முழைச் சாரல்
அகவுமணி மஞ்ஞை ஆடல் தோன்றுப்
பகலிருள் படுக்கும் பன்மரப் பொதும்பர்
விறகொய் மாக்கள் விடுமொலி சிலம்பும்
நிமிர்மலை யடுக்கம் குறுகுவ மாயின்
குருவியும் கிள்ளையும் ஒப்பிமான் கடிந்(து)
உயர்பரண் ஏறிச் சிறுமியர் சிலைக்கும்
முதிர்தினைப் புனத்துள் அத்தம் சேறலின்
கதிர்த்தினை கசக்கி ஆர மென்று

விடர்கால் தீம்புனல் பருகி அசைவொழிந்து
குன்றுமீப் படர்குவம் எனினே, குன்றத்துத்
தண்ணியல் மென்கால் தோள்தழு வும்மே
கால்இவர்ந் தாரக் கமழ்வீ சும்மே!
ஆரக் கமழ்வின் அகில்குழை யும்மே!
அகிலுந் தேக்கும் விண்தொட நிவந்து
முகில்நுதல் வருடத் துளிபொழி யும்மே !
துளிமழை நுண்சிதர் துவரகன் சிலம்பின்
புடைபுறம் உரிஞ்சி ஆடிய பிணைகொடி
சாறணி நெடுந்தேர் அலங்கலின் அசைமே!

நரந்தங் கமழும் பரல்மலி கொடுநெறி
குருந்தம் பாதிரி யொடுநா றும்மே!
பெருங்கை வேழம் துயின்மடிந் தன்ன
இருங்கற் கிடக்கை மரம்பயில் வரைப்பின்
கற்பக வேர்வீழ் நெடுவிடர் வண்புல்
வெற்பியா டருந்திப் பாயம் பாயும்.
வெவ்வழிப் பயணத்து வெரிநுறு தோட்பைக்
குறத்தி துயிற்றிய குழவி போலவும்
பாலுண் பன்றி வன்பறழ் போலவும்

வேர்மிசைப் பழுநிய பலாக்கனி வேட்டு
வள்ளுகிர் ஊன்றிய செம்முகக் கடுவன்
அயலிருஞ் சுனையுள் துடுமென வீழ்ந்த
பயில்சுவைத் தேமா ஒண்கனி பார்க்கும்
வெய்தூண் ஏனல் நெய்யூன் நச்சி
வேட்டம் வேட்ட வெண்தோல் மாந்தர்
குழல்வேட் டெஃகம் குறியுறத் தூக்கி
அழல்வேட் டதிர்தலின் வெரீஇ நடுக்குற்று
இரியல் மந்தி மரந்தொறும் தாவிப்
பெருங்குரல் எழுப்பப் புள்ளினஞ் சிதறிக்
கவ்வை ஆர்ப்பக் கானகம் இரட்டும்.
பெருங் கல்லாலம் பல்பக வீழ்வேர்
பாறை பற்றிப் பாம்பிற் படர்ந்த
செழுங் கேழ்ப் பொங்கர் உதிர்பூஞ் சருகின்
உழுங்காற் கோழி புழுவூண் மிசையும்.
வருக்கை சிதறி உக்க தேறல்
பருஉக்கண் தும்பி மொய்க்கும் சோலைக்
குயில்பண் பொழியப் புறவம் குனுக
மயில்நடை பழகு மால்வரைக் கவாஅன்
இருள்துமித் தெழுந்த நிலவு போலவும்,
களிற்றுமுகத் தொளிர்ந்த ஓடை போலவும்,
அறற்குழல் தாங்கிய தெரியல் போலவும்,
கருங்கலம் வழிதரு தீம்பால் போலவும்
விழவணி சேணூர் முழவதிர்ந் திம்மென்(று)
இழிதரும் தூவெள் இவர்திவல் அருவி
ஆடுகம் என்கோ! பாடுகம் என்கோ!
உள்ளூறும் உவப்பின் சாடுகம் என்கோ!
கள்ளுறு களியரின் கயவாய் அணந்து
தெள்நறுந் தீம்புனல் பருகுகம் என்கோ!
குளிர்கயம் பாய்ந்து குடைகுவம் என்கோ!
கதழ்புனல் கிழித்து நீந்துகம் என்கோ!
வேழம் புக்க வேழம் போல
வீழம் புக்க எற்றியுஞ் சிதர்த்தும்
கள்ளவிர் நுரைபுரை வெள்ளுறழ் குமிழ்புனல்

தள்ளா விருப்பின் பொழுதிறந் தாடிக்
கரைதாழ் வருக்கைச் சுளையொடு தேமாப்
பொறையமர்ந் துண்ணலின் அழிபசி கொன்று
துளிகூர் எழினி தைவரு முகட்டின்
வளிகூர் அடுக்கல் வருடை பாயும்
மீமிசை நிவப்பின் பேர்எழில் வியந்து
காமுறு நெஞ்சின் அருப்பம் பாராது
கல்நெறி ஏறி இட்டிய கணவாய்ப்
புல்நெறி பாறைப் புறங்கடந் திடினே,
விசும்புகண் இடித்தென வார்ந்துயர் மூங்கில்
பசும்பல் கூட்டத்து வயின்வயின் அசையும்.
புதலார் மருங்கின் முள்விளை நெடுங்கான்
மதில்சூழ்பு குறுமரம் இடையகல் வெயில்வெளி
பெயல்தோய் வன்ன மஞ்சு தவழவும்,
ஆனா விருப்பின் ஆங்கமை யாது
சேணார் துணைமலை ஏறவுந் தூண்டும்.
பானாட் கங்குல் பல்வேட் டத்துப்
பெருமித யானை நிரைமணந்து சேறலின்
பொழிலார் பைங்கான் துவைத் தூண் பெறவும்,
எழிலார் பல்கொடி இற்றுண் டறவும்,
கிளைமுரி படவும், தழைசிதை படவும்
வளையாப் புதுவழி வகுத்தன கிடக்கும்.
அவ்வழி தொடர்குடி செல்வுழி அருங்கான்
முள்அடர் வன்புதர் செல்நெறி தகைக்கும்.
பல்விடர் நெடுஞ்சேண் புலிஉர றொலிக்கும்.
உட்குவரு நெஞ்சின் உரன்முதல் நிறீஇத்
தட்குவரு காலின் தளர்வுங் கடீஇ
அழுங்காச் செலவின் பூட்கையம் எனினே,
வருங்கான் காட்சி மறத்தலும் உண்டோ?
பன்முள் வேலிப் பாழ்ம்புனற் படுகை
கன்மறை யரணத்துக் கடியிடை நாப்பண்
என்பு சிதறிய புலவுநா றிருக்கைப்
பெரும்புலி துஞ்சும் மயிர்மலி முழைஞ்சு
தண்டா மரபின் தலைப்படு மன்னே!
கண்டு பெயர்தலின் கால்நடுக் குறுமே!

இன்னுங் கேட்டியோ, இயற்கை விழுமம்!
எம்மூர்க் கணித்தே எறிதிரைப் பரவையும்!
ஒல்லென் ஒலிகடல் உடஇய கானல்
மல்லல் பேர்யாறு கடல்தலை மணக்கும்
நெய்தல் ஓங்கிய நீர்ச்செறு நடப்பின்
பைதல் ஓங்கிய பரவை அரிகரை
வைகறைக் காட்சியின் வனப்பினி துண்டோ?
மாயிரு மாகத்து மல்கிருள் உடைப்பப்
பாய்சுடர்ப் பரிதி ஆழியின் இவர்தர
நீலிருள் விசும்பில் பசும்பொற் கால்கொளக்
கீழ்த்திசை வட்டத்துக் கிளரொலி சேப்ப,
மாழை உருக்கின் வார்கடல் நெளியும்.
பொற்றுகள் தூஉய்ப் பொலிவிட் டாங்கு
முற்று இளங்கதிர் திசைதொறும் பரக்கும்.
வளிசினஞ் செருக்கி வண்கடல் கடாவலின்
வெளில்நுரைப் பாய்மா விசைப்பின் வருபுனல்
உவடுபடு குவிதிரை நுரைநக அடுக்கிக்
குவடுபடு பனிவரை தன்மிசைக் காட்டியும்
கல்பொரு பளிங்கின் கரைபொரு துடைதலின்
பல்வெண் முத்தங் கொழித்தென மருட்டியும்
வல்விரை வாயும் அணியிகந் தோடி
எல்லைதொட் டடங்கும் பள்ளி யோரின்
ஓங்குவல் விரைவில் கரை தெறக்கடுகி
வீங்குசெல வொழித்துப் பின்னுற் றடங்கியும்
கடல்செய் மாயம் கணக்கிற் படுமோ?
கெடலறு நெஞ்சங் கிளருற எழுதலின்
அடிபுதை அரணம் கடிமணல் வீசித்
தாள்புரள் அறுவை தொடையிற் சுருக்கித்
திரைத்துமி தெறிப்பக் கடல்முகம் பாய்ந்தும்
மலிதிரை உழக்கி மெய்யகம் நனைத்தும்
சோழி தேடி ஈர்ம்மணல் அகழ்ந்தும்
ஊழூழ் ஆடி உள்ளம் நிறைகுவம்.

(வளரும்)

# மாணவர்க்கு ஒரு மடல்!

**சேயோன்**

தமிழ் மாணவ!

மொழியன்பு ஒரு சில உள்ளங்களிலாவது உரிமை வேட்கை முளைவிட வழி செய்துள்ளது. இவ்வுள்ளங்கள் எல்லாம் தம்முள் உறவுகொண்டு, தம்மைப் புரிந்துகொண்டு ஒன்றுபட்டுக் கடமையாற்றக் கூடின் தமிழகத்தைப் பீடித்துள்ள ஆரியச்சேறும், ஆங்கில அழுக்கும் அடிமைத்தளையும் அறுபடும் எளிதில். உருப்படியாகச் செயலாற்றக் கூடியவர்கள் இதுவரை இத்தமிழகத்தில் பத்துப் பேராவது ஒன்று சேர்ந்துள்ளனர் என்பது ஐயமே. பெரிய பெரிய கூட்டங்கள் எல்லாம் எவ்வளவோ செய்தும் வெற்றிபெற முடியாத போது ஒரு சிலர் சேர்ந்து என்ன செய்யமுடியும் என்ற சோர்வு எவர்க்கேனும் இருப்பின் அஃது அறியாமையின் விளைவே. தமிழகத்தில் இதுவரை எந்த இயக்கமும் வெற்றி பெற்றதில்லை. ஏனெனில் இயக்கங்களைத் தோற்றுவித்தவர்கள் ஏதாயினும் ஒருதன்மையைத் தோற்றுவிட்டிருந்தனர். எவருடைய வாழ்வும் தாழ்வும் வெற்றியும் தோல்வியும் நம்மைக் கட்டுப்படுத்த வேண்டா; வேறெந்த இயக்கத்தோடும், எந்த நிகழ்ச்சிகளோடும் நம் இயக்கத்தை இணைத்துப் பார்க்கவேண்டுவதில்லை. நமக்குள்ள வேலை தனியானது; நமக்குள்ள வழியும் தனியானதாகவே இருக்கும் என்றறிந்து நமக்குள்ள பணியினையும் அதைத் தொடர்வதற்கான வழிவகைகளையும் சரிவரத் தெரிந்துகொள்வது நலம் என்று கருதுகின்றேன்.

தமிழ்காக்க முனைந்துள்ள நாம், தமிழென்பது தனிச்செந்தமிழே என்றும், தமிழர் தமிழ் பேசுவதும் எழுதுவதுமே இயல்பு என்றும், இதில் தவறுவது இழுக்கு என்றும், தெரிந்தே தவறுவதும், தவற்றைச் சரி என்பதும் குற்றம் என்றும் ஒப்புகின்றோம். இந்தி எதிர்ப்பும் பிற அடிமைத் தளைகளறுப்பும் தமிழைக் காப்பதற்கும் அதன்வழி நம் உரிமையைக் காத்திடற்குமே என்று ஒப்புகின்றோம். இக்கருத்துகளை ஏற்றுக்கொள்வோமாயின் மேற்கொண்டு தமிழ் நலத்துக்கான வழிவகைகளை ஆயவும் தக்கன செய்யவும் புகுவோம்.

உணர்வு உள்ளவர்கள் நாம். அவ்வுணர்வு மங்காது எந்நிலையிலும் பொங்கும் நல்லுணர்வு எனின், தமிழியக்கத்துக்குத் தேவையான எல்லாத் தகுதிகளையும் நாம் பெற்றிடலாம்; தமிழைக் காத்திடலாம். முதலாவது நமக்கு வேண்டுவது தமிழறிவு. தமிழை அறிந்திட தமிழ் உணர்வாளர் துடிப்பர். ஆயினும் இற்றைத் தமிழகநிலையில் அவர்கள்

முயன்றால்தான் தமிழைக் காணமுடியும். ஏனெனில் தமிழகத்தில் தமிழ்தான் இல்லை. அரசே தமிழறியாத அரசு; தமிழைக்கெடுக்கும் அரசு. தமிழை - நல்ல தமிழை வெற்றியுடன் அழித்துவரும் அரசு இந்த அரசு. இந்நிலையில் தமிழை முயன்று தேடித்தான் காண வேண்டும்.

பொதுமக்கள் எனப்படுபவர் தமிழின் தகைமை உணராத மாக்க ளாகவே இருக்கின்றனர். எனவேதான் தமிழைத்தரும் தாளிகைகளும் இல்லாதொழிந்தன. மாபெரும் நூல் நிலையங்களிலும், பல்கலைக் கழகங்களிலும்,மற்றெந்தக் கல்வி நிலையங்களிலும் தமிழ் இல்லை. ஏனெ னில் தமிழுக்குத் துணையிருக்க ஆள் இல்லை. தமிழைத்தரும் தென் மொழியின் விற்பனை இரண்டாயிரம். தமிழைப் பிழைக்கும் குமுதம் விற்பனை இருநூறாயிரம். தமிழ்க்கொலைபுரியும் 'கல்கி, விகடன்' எங் கும் கண்களில் படும்; தமிழுக்கு இத்தமிழ் மறந்த உலகில் வாழ்வு தேடும் 'தென்மொழி' தேடினால்தான் கிடைக்கும். வாங்குவார் இலர் என்பதால் கடைகளுக்கு வருவதில்லை; படிப்பவர் இலர் என்பதால் படிப்பகங்களுக்கு வருவது இல்லைபோலும்.

எதையோ எதிர்த்துப் போரிட்டோம்! உயிர்விட்டோம்! பின்னர் கண்முன்னர் தமிழும் தமிழரும் சாகப்பார்த்து வாளாவிருக்கின்றோம். தமிழ்க்கொலை தெரியவில்லை எனில் நம் கண்கள் குருடென்பதா? கருத்து குருடென்பதா? தமிழின்பால் சிறிதேனும் அன்புடையவர் செய்ய வேண்டுவதைத் தமிழுக்காக உயிரும்விட அணியமாயிருப் போர் செய்யாமலிருக்கிறோம் என்றுணர்கின்றேன். நம் உணர்விலும் நம் வன்மையிலும் நான் ஐயம் கொள்ளவில்லை. நம் முயற்சியைத் தான் குறிப்பிடுகின்றேன்.

வாடும் தமிழ்ப்பயிருக்கு நீரூற்றலும், நிழல் தருதலும், வேலி அமைத்தலுமே நாம் உடனடியாகச் செய்யவேண்டுவன. தமிழுக்கு வாழ்ந்து வாடியிருப்போரைக் கண்திறந்து காணவேண்டும் நாம்; அவரொடு நல்லுறவு பூண்டு அவர்தம் தமிழ்க்காப்பு முயற்சிக்கு நற் றுணை நல்கவேண்டும். பின்னர் அவர்தம் வாழ்த்துடனும் துணையுட னும் கையில் வாளேந்திடின் பகைவரைப் புறங் காண்போம்.

நாம் தமிழை நினைப்பது உண்மையெனில் கலவைமொழி நமக் குக் கசக்கும்; குப்பை இதழ்கள் நம் கண்களைக் குத்தும். தமிழ் மறந்த இசை நம் காதுகளைக் குடைவதுணர்வோம். தமிழைக் கேட் கவும் பேசவும் எழுதவும் ஏங்கியிருப்போம். சிறிதே நம் கண்கள் திறப்பினும் எங்கும் இயல்பாய்த் தமிழ் சீரழிவதைக் காணலாம்.

காண்போமெனில் நிலைபுரியும்; வழி தெரியும். தமிழ் என்பது எழுத்தன்று; எழுத்துட் புகுந்த கருத்து! கருத்துட்புகுந்த வினை! வினையில் மலரும் பண்பாடு.

கட்சிப் பற்றுடையேம் அல்லேம் என்று மாணவர்கள் அறிவித்த போதும் அவர்தம் செயல்கள் கட்சிமுத்திரை குத்திக்கொள்வதையே வரவேற்பதாக உள்ளன. கல்லூரி நிகழ்ச்சிகளுக்கு அரசியல் மேடைகளில் முழங்குபவர்களையே அழைத்து வருகின்றோம். அவர்களும் மாணவர் பயனுறப் பேசுகின்றாரிலர். மேலும் பாவாணரையும், இலக்குவனாரையும், தமிழ்த்திறலார் பிறரையும் யார்தாம் அழைப்பர்? அவர்களும் கட்சிக்கொடி தூக்கிய பின்னர்தான் அழைக்கப்படுவரா? மாணவர்களே தக்கவர்களைப் போற்றுவிடில் யார்தாம் அக்கறை கொள்வர்?

அரசியல் கட்சியினர் தமிழைப் பயன்படுத்திப் பிழைத்துக்கொள்கின்றனர். தமிழறிஞர்கள் ஒரு சிலர்தாம் தமிழை வளப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் நாம் எல்லா வகையிலும் தமிழ் வாழ்நர்களைப் புறக்கணிக்கின்றோம் என்பதை எவரும் ஒப்புவர். கட்சித் துணையிருந்தும் இலக்குவனாருக்குப் பத்தாயிரம் உருபா திரட்டுவது பெரும்பாடாகப் போனது. 'தென்மொழி' அச்சக அமைப்புக்கு ஓராண்டாகச் சேர்ந்த தொகை பத்தாயிரத்தையும் எட்டவில்லை. உலகிற் சிறந்த மொழியறிவு படைத்த மறத்தமிழர் தேவநேயப் பாவாணர் அவர்களிடம் ஓராயிரம் உருபா கையயம் இருப்பதும் ஐயமே! எங்ஙனம் அவர்தம் நூல்களை வெளியிடுவார்?

தமிழுக்கு யாருளர் இவர்களை ஒதுக்கின்? இவர்களை இரக்கவிட்டுப் பின்னர் இவர்களை இறக்கவும் விட்டு என்ன செய்யப் போகின்றோம் நாம்? இவர்கள் இல்லாமல் மலேசியாவில் உலகத் தமிழ் மாநாடும் நடந்தது, இனித் தமிழ்நாட்டிலும் நடக்கும். இவ்வளவிருந்தும் புதிய தலைமுறையினராகிய நாமும் நன்னெஞ்சினரைப் புறக்கணித்து ஒதுங்கியுள்ளோம். நம் ஒவ்வொரு தவறும் (கடமை தவிர்ப்பும்) நல்லவர்களை அழுத்திக்கொண்டிருக்கிறது. அவர்கள் சுமையைக் குறைக்க நம்மால் முடியும். மிகச் சிலராயுள்ள தமிழ்ச் சான்றோர்களுடன் உறவுகொள்வோம்; மகிழ்வுதருவோம்; பயன் பெறுவோம்; வாருங்கள்! நம் கைகள் இணையின் வரும் விடுதலை! வரும் வாழ்வு!

தமிழ் நலம் நாடும்

சேயோன். (ஒரு தமிழ் உயிர்)

சாரு. பாலகிருட்டிணன்.

# அம்மை நோய்

முன்னுரை: இந் நோயைப் பற்றி மக்கள் ஓரளவேனும் அறிந்திருப்பினும் அதன் முழுத்தன்மையினையும் அறியாது மூட நம்பிக்கைகளை மேற்கொண்டு அல்லற்படுகின்றனர். மேல் நாடுகளிலெல்லாம் தற்பொழுது இந்நோயை முற்றிலும் தடுத்தி நிறுத்திவிட்டதாகக் கூறுகின்றனர். ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரை, மக்கள் கல்வியறிவு பெற்று, மூட நம்பிக்கைகளை ஒழித்து, முறையான மருத்துவ முறைகளின் படி ஒழுகாதவரை அதை நாம் தடுத்தாட் கொண்டதாகக் கருதமுடியாது. அறியாமக்கள் முதல் படித்தவர் வரை கண்டால் குலை நடுங்கும், இந் நோயின் நிலையினையும், அதன் தன்மைகளையும் பற்றி ஈண்டுச் சற்றே காண்போம்.

அம்மை நோய்: இந்நோய் மிக விரைவில் பரவக் கூடியதொரு தொற்று நோய். இது 'வைரசு' (Virus) வகையைச் சார்ந்த நுண்ணிய உயிரிகளால் உண்டாகின்றது. இது காற்றின் மூலமும், நோயாளியின் கொப்புளங்களிலிந்து கசியும் சீழிலிருந்தும், பொருக்குகளிலிருந்தும் பிறருக்குத் தொற்றுகின்றது. அம்மை நோயில் பெரியம்மை (Smallpox), சின்னம்மை (Chickenpox) என இருவகையுண்டு.

**அம்மைத் தடுப்பு ஊசி:** இந்நோய் வராமல் தடுக்க அம்மைத் தடுப்பு ஊசியைப் (Small pox vaccination)பயன்படுத்துகின்றனர். ஒரு நல்ல உடல் நலமுள்ள ஆவின் உடலில் இந்நோய்க்குக் காரண மான வைரசு உயிரியைச் செலுத்துகின்றனர். அதன் மடியில் உண்டா கும் கொப்புளங்களிலிருந்து ஒருவகை நீரையெடுத்து, 'கிளிசரி'னுடன் (Glycerine) சேர்த்து; அம்மைப்பால் உண்டாக்குகின்றனர். ஒவ் வொரு குழந்தைக்கும் பிறந்த மூன்றுவது மாதத்திலேயே ஊசியின் மூலம் இம்மருந்தை உடலிற் புகுத்தல் வேண்டும். அக்குழந்தைகளுக்கு இஃது ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் வரை இந்நோயை எதிர்க்கக் கூடிய ஆற்றலைக் (Ummunity) கொடுக்கின்றன. பின்பு மூன்றுண்டு களுக் கொருமுறை தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளல் வேண்டும்.

**பெரியம்மை:** ஒரு முறை பெரியம்மையினுல் தாக்குண்டவர் களுக்கு, மறுமுறை அந்நோய் ஏற்படுவதே யில்லை. ஏனெனில் அதுவே அவர்களுக்கு நோயைத் தடுக்கும் ஆற்றலைப் பெருமளவு அளித்து விடுகின்றதாம். இந்நோயின் தொடக்கக் காலத்தில் உடல் நடுக்கம், தலைவலி, மயக்கம்,உடல்வெப்பம் முதலியன ஏற்படுகின்றன. மூன்றும் நாளன்று உடலின் வெப்பநிலை தணிந்து கொப்புளங்கள் (Rashes) ஏற்படுகின்றன. இந்நிலை ஒரு கிழமைவரை நீடிக்கும். பின்பு மீண்டும் உடலின் வெப்ப நிலை (Temperature) ஏறிவிடும். அப்பொழுதுதான் கொப்புளங்களில் சீழ் (Pus) பிடிக்கத் தொடங்கு கின்றது.

கொப்புளங்கள் முதன் முதலில் முகம், மார்பு, முதுகு முதலிய இடங்களில் தொடங்கிப் பிறகுதான் வயிறு, கை, கால் போன்ற இடங் களில் பரவுகின்றன. முகத்திலுள்ள கொப்புளங்கள் மற்றவற்றை விடச் சற்றுத் தடித்தே காணப்படும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எல் லாக் கொப்புளங்களும் ஒரே நிலையில் இருக்கும்.

இந் நோய் கடுமையாகக் கண்டவர்கள் பிழைப்பது அரிது. அவ் வாறின்றித் தப்பிப் பிழைத்தவர்கள், கண்கள், காதுகள் முதலியனவற் றுள் இடையூறு அடைந்தும், உடம்பு, முகம் போன்ற இடங்களில் குழிகள் பெற்றும், அருவருப்பாகக் காணப்படுவர்.

**சின்னம்மை:** பெரியம்மைக்கும் சின்னம்மைக்கும் பெருத்த மாறு தல்கள் கிடையா. பெரியம்மை கடுமையாகவும், சின்னம்மை சற்றுக்

கடுமை குறைந்தும் காணப்படும். இந்நோய் ஒருவரையே பலமுறை கூடத் தாக்கலாம். இதில் பெரியம்மை போன்றல்லாமல் உடல் வெப்பம் ஏற்பட்ட அன்றே கொப்புளங்கள் தோன்றிவிடுகின்றன. முதலில் வயிற்றுப்பாகம், மார்பு இவற்றில் தோன்றிப் பின்புதான் கை, கால்களில் பரவுகின்றன. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒவ்வொரு கொப்புளமும், ஒவ்வோர் அமைப்பில் காணப்படுகின்றது. இதற்குத் தடுப்பு ஊசி கிடையாது.

மருத்துவம்: இந்நோயைப் பற்றி முதன் முதலில் உடல்நல அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.

1. நல்ல ஒளியும், காற்றோட்டமும் பொருந்திய அறையில் நோயாளியைப் படுக்கவைக்க வேண்டும். பால், கஞ்சிபோன்ற எளிதில் செரிக்கக் கூடிய உணவுகளையே கொடுக்கவேண்டும்.

2. வாய், கண்கள், காது முதலியவற்றை நன்கு கழுவித் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.

3. உடல் அரிப்பு, தீ நாற்றம் போன்றவற்றை நீக்க ஒரு விழுக்காடு (Gentian violet) என்ற பொருளும் நீர்த்த 'பொடாசியம் பர்மாங்கனேட்' காடியையும் பயன்படுத்தலாம். O


## தென்மொழி, கடலூர்-1.

**தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.**

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள் நாடு | கொழும்பு | வெளி நாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7–25 உருபா | 9 உருபா |
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

**விளம்பரம்**

| | | |
|---|---|---|
| அட்டை நான்காம் பக்கம் | (இரு வண்ணம்) | 100 உருபா |
| ,, ,, | (ஒரு வண்ணம்) | 75 உருபா |
| உள்ளே முழுப்பக்கம் | | 50 உருபா |
| ,, அரைப்பக்கம் | | 25 உருபா |

தொடர்ந்த விளம்பரங்களுக்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

புதுவை. சுப்பிரமணியன்.

# தமிழ் மாண்பு

தோற்றம் அறியாத தொன்மைச் சிறப்புற்று
மாற்றம் அறியாது மாநிலத்தே. - ஏற்றமுடன்
பன்னும் பனுவல் பயன்விளைய எஞ்ஞான்றும்
மன்னுஞ் செழுந்தமிழ் மாண்பு.

எழுத்தறி விக்கும் இறைவனாய் வந்து
தொழத்தகுசீர்ச் சொல்பயிற்றுந் தாயாய் - வழுத்தும்
பொருள்கொடுக்கும் பொன்னுருப் புகழ்த்தந்தை யாகி
மருள்கெடுக்கும் மாத்தமிழ் மாண்பு.

இயல்பாய் அமைந்த இருவடிவை யன்றி
அயல்போய்ப் பிறவடிவை அண்டி - இயலாத
நாடா வளந்தரும் நாடேபோல் உள்ளதாம்
வாடாத செந்தமிழ் மாண்பு.

பெயல்நீரை யன்றிப் பிறிதொன்று வேண்டா
வயலில் செழித்து வளர்ந்த – பயிர்போலாம்
தன்மேற் சொரிந்த தகவுடையார் நூற்றெருகையின்
வன்மை வளர்த்ததமிழ் மாண்பு.

ஓடுநீர் அங்கங்கே ஒட்டும் அழுக்கெல்லாம்
நீடுதான் தூய்மைபெற நீக்குதல்போல் – கேடுசெயும்
வேற்றுச்சொற் குப்பை விளைக்கும் இழுக்கெல்லாம்
மாற்றி வருந்தமிழ் மாண்பு

தன்விழுது வேறு தனிமரமாய் ஓங்கிடவுந்
தன்வளர்ச்சி குன்ருத் தழைஆலின் – தன்மையைப்போல்
பன்மொழிகள் தோற்றிப் பழம்பொலிவு குன்ருமல்
வன்மைபெறும் வண்டமிழ் மாண்பு.

அறநெறியைக் காட்டி அதன்வழியே செல்ல
உறுதுணையாய் ஊன்று பொருளைப் – பெறவைத்துக்
குன்ருத இன்பம் குடியிருக்கும் வீடளிக்க
மன்ருடும் நற்றமிழ் மாண்பு.

உயிர்வேறு மெய்வேருய் உள்ள நிலைகாட்டி
உயிர்மெய்யோ டொன்றி உலகில் – பயிலும்
இசைநாட கத்தின் இயல்பெல்லாங் காட்டும்
வசைநாடா முத்தமிழ் மாண்பு.

குறிஞ்சிமலை தாவிக் கொடிமுல்லைக் காட்டிற்
செறிந்து மருதவயல் சேர்ந்து – நிறைந்தமணற்
பாலையிலே ஊறிப் படர்நெய்தல் ஆழிதொடும்
மாலையதே இன்றமிழ் மாண்பு.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாய்
பின்னைப் புதுமைபெறும் பெற்றியதாய் – அன்னை
மொழியாய் விளங்கறிவின் முன்ளேன் முதனூல்
வழியாய் வருந்தமிழ் மாண்பு.

———:o:———

கு. சிதம்பரம், எம். எசி. முதலாண்டு,
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை–2.

# கதிரியக்கத் துணையணுக்கள்
## (RADIOACTIVE ISOTOPES)

நாளுக்கு நாள் வெகுவிரைவாக முன்னேறும் இந்த அறிவியல் உலகத்தில் கதிரியக்கத்துணையணுக்களின் பங்கு பெரிதும் வியத்தற்குரியது. துணையணுக்கள் (Isotopes) இரண்டு வகைப்படும். ஒன்று கதிரியக்கத்துணையணுக்கள்;மற்றொன்று கதரியக்கமற்ற துணையணுக்கள் (Non-radioactive Isotopes) இந்தக் கதிரியக்கமற்ற துணையணுக்களால் ஏற்படும் குறிப்பிடத்தக்க நன்மைகள் இதுவரை ஒன்றுமில்லை.

இயற்கையிலேயே கதிரியக்கமுள்ள மாழைகள் (Metals) மொத்தம் நாற்பது. இவை தாங்களாகவே மூன்று வகைப்பட்ட கதிர்களை (Radiations) வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன அவையாவன: முதல்வகை, இரண்டாம்வகை, மூன்றும் வகைக் ( $\alpha$ ,B,- $\gamma$ -rays)கதிர்களாகும். முதல்வகைக் கதிர்கள் இரண்டு அலகுகள் பொருண்மையும் (two unit masses), நேர் மின்னூற்றலையுடைய துகள்களும் (positively charged particles) உடையவை. இரண்டாம் வகைக் கதிர்களுக்கு பொருண்மை (mass) கிடையாது; ஆனால் இவை எதிர் மின்னூற்றலையுடைய துகள்களை (negatively charged particles)

உடையன. ௪ மூன்றும் வகைக் கதிர்கள் பொருண்மையற்றவை; மின்னாற்றலற்றவை; ஆனால் மிகுந்தவிரைவையும், குறுகிய அலை நீளத்தையும் (short-wave lengths) உடைய புதிர்க் கதிர்களைப் (x-rays) போன்றவை.

முதல்வகைக் கதிர்களால் அந்தத் தனிமத்தின் (element) அணு எடையில்(atomic weight)நான்கு அலகுகளும், அணு எண்ணிக்கையில் (Atomic Number) இரண்டும் குறையும். இரண்டாம் வகைக் கதிர்களால் தனிமத்தின் அணு எடை மாறாது; ஆனால் அணு எண்ணிக்கையில் ஒன்று கூடும். மூன்றும் வகைக் கதிர்களால் தனிமம் யாதொரு மாற்றமும் அடையாது. இவ்வாறாக, முதல்வகை இரண்டாம் வகை மூன்றும் வகைக் கதிர்கள் வெளியே செல்லுவதினால் தனிமத்தின் தன்மை (nature) மாறிவிடும்; புதியதொரு தனிமம் உண்டாகும். இப்படி உண்டாகும் தனிமத்திற்குச் சேய்த் தனிமம் (daughter element) என்று பெயர். இப்படிப்பட்ட சேய்த்தனிமங்கள் கதிரியக்கக் தன்மையைப் பெற்று, வேதியல் இயைபுகளில் (chemical reactions) தாய்த்தனிமத்தை (parent element) ஒத்திருந்தால், கதிரியக்கத் துணையணுக்கள் என்று பொருள்படும்.

இப்படிப்பட்ட கதிரியக்கத் துணையணுக்களை இயற்கையிலும், செயற்கை முறையாலும் பெறக்கூடும். செயற்கை முறையாலுண்டாகும் கதிரியக்கத் துணையணுக்களால் கணக்கற்ற நன்மைகளை அடைய முடிகிறது. சிலவற்றை இங்குக் காண்போம்:

அணு ஆற்றலின் (nuclear energy) கண்டு பிடிப்பால் சிறப்பாக அடைந்துள்ள முன்னேற்றம், கதிரியக்கத் துணையணுக்களை பண்டுவத்திலும் இன்னும் பற்பல ஆராய்ச்சிகளிலும் பயன்படுத்தலேயாகும். காட்டாக, வாழும் ஓர் உயிர்க்கு வளர்த்திச் சுரப்பியில் (Tnyroid gland) புற்றுநோய் கண்டால் வளர்ச்சி தாக்கப்படும். இந்தக் குறையை நீக்கக் கதிரியக்க அயோடின்(radio active iodine) பயன்படுகிறது.

உயிரியின் எலும்புகள் எவ்வெப் பொருட்களால் அமைந்தவை; அவை எந்த விழுக்காட்டில் (ratio) சேர்ந்திருக்கின்றன; குறிப்பிட்ட எலும்பின் உறுதித் தன்மையென்ன; எவையெவற்றால் சிறந்த, திண்ணிய வலுவுள்ள எலும்புகளை உறுவாக்கமுடியும் என்பனவற்றை அறி

வதற்குக் கதிரியக்கச் சுண்ணகம் (radioactive calcium)பயன்பட்டு வருகின்றது. நிலைத்திணை இனங்கள் ஒளிச்சேர்க்கை செய்வதற்கு எவையெவை எந்தெந்த அளவில் தேவைப்படுகின்றன என்று தெரிந்துக் கொள்வதற்குக் கதிரியக்கக் கரியகம் (radioactive carbon) பயன்படுகின்றது. அதுபோல் குருதியிலுள்ள நோய் நுண்ணுயிரிகளைக் (bacterias) கொல்லுவதற்குக் கதிரியக்க எரியகம் (radio active phosphorous)பயன்படுகின்றது. புற்றுநோய் கண்டவர்களை (cancer patients) நலப்படுத்துவதற்குக் கதிரியக்கச் சுண்ணகம் பயன்படுத்தப்படுகின்றது.

இன்று வியப்பினும் வியப்பாகச் செயற்கை நெஞ்சாங்குலை செய்யப்பட்டு, ஆய்வு பெற்றும் விட்டது. நடைமுறையில் அந்தச் செயற்கை நெஞ்சாங்குலையை இயங்கும்படி செய்து, உண்மையான நெஞ்சாங்குலையில் உள்ள கோளாறுகளைச் சரிசெய்து உயிர்க்கு இடர் வராவண்ணம் காக்கமுடியும். இவ்வருஞ்செயற்குக் கதிரியக்கத் துணையணுக்கள் பெரிதும் பயன்படுகின்றன.

நோய் நுண்ணுயிரிகளைக் கொல்லுவதற்கு ஆற்றல்மிக்கக் கதிர்களைக் கண்டுபிடிப்பதற்குக் கதிரியக்க மாழைகளில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன உணவுப் பொருள்கள் கெட்டுப்போகாமல் காப்பதற்கு, உணவுப் பொருள்களை மூடப்பட்டுள்ள கொள்கலங்களில் வைத்துக் கதிர்களை ஊடுருவச் செய்கின்றனர். அவை உணவுப் பொருள்களுக்குக் கெடுதி விளைவிக்கும் நுண்ணுயிரிகளைக் கொன்று விடுகின்றன. இப்படிப் பண்படுத்தப்பட்ட உணவுப்பண்டங்கள் அறை வெப்பத்தால் கெட்டுப் போகா.

இப்பொழுது கதிரியக்கத் துணையணுக்களைப் பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கும், மண்பதைக்குப் பயன்படும்படி செய்வதற்கும் புதிது புதிதாகத் துணையணுக்களைக் கண்டுப்பிடிப்பதற்கும் ஆழ்ந்த ஆராய்ச்சிகள் உலக ஆராய்ச்சிக்கூடங்கள் அனைத்திலும் நடத்தப்படுகின்றன. இப்பொழுது ஒரு குறிப்பிட்ட மாழையின் கதிரியக்கத்தின் துணையணுவால் அளவற்ற மின்னாற்றல் விளைவிக்க முடியும் என்று கண்டறிந்துள்ளனர்.

இப்படிப்பட்ட கதிரியக்கத் துணையணுக்கள் அணு உலைகளில் (nuclear reactors) உண்டாக்கப் பெறுகின்றன. O

நாடகவியல்:

புலவர். ம. வே. பசுபதி, திருப்பனந்தாள்.

# முன்னுணர்த்தல்

தோற்றுவாய்: நாடகங்கள் இன்பியல் துன்பியல் என்னும் இரு வேறு முடிபுகளுள் ஒன்றனைக் கொண்டிருக்கும். நாடகவாசிரியன் தன் நாடகம் இன்பியல் முடிபைக் கொண்டதாக அமைப்பானேயானால் அதனை முன்னுணர்த்த வேண்டும். ஏனெனில், மிகுந்த துன்பம் எதிர் பாராத முறையில் காட்டப்படின் அதிர்ச்சியினால் நாடகத்தின் சுவை உணர வியலாது; அன்றியும் முடிவுபற்றி யாவர்க்கும் ஒரு மனக்குறை உண்டாகும்.

அவல முன்னுணர்த்தல்: துன்பியல் நாடகமாயின் முன்னமேயே, பின் நிகழவிருக்கும் அவலத்தை வெளிப்படையாகவோ, குறிப் பாகவோ உணர்த்தல் வேண்டும். வெளிப்படையாகக் கூறிவிட்டால் நாடகச்சுவை இன்றிப்போகுமே என்ற ஐயம் எழுதல் இயல்பு. வெளிப் படையாக அவல முன்னுணர்த்தல் என்பது, 'என்ன இறுதிக்கோ இவ்வண்ணம் செய்வதிவன்?' எனவும், 'இவன் முடிவுக்கோ இவ் வெண்ணம்?' எனவும் நாடகப்பாவியங்களில் ஆசிரியன் தற்கூற்றுக் கூறுவதேயன்றி 'இக்காரணத்தால் இன்னான் இன்ன முறையில் இவ் விடத்தில் அவலமடைவான்' எனக் கூறுவதன்று. மேலே குறித்த

வண்ணம் வெளிப்படையாக முன்னுணர்த்தும் சொற்கள் தற்கால நாடகங்களில் ஏவலர், ஊரவர் முதலியவர்களின் கூற்றாக அமைக்கப் படுகின்றன.

**தீக்குறி (உற்பாதம்):**— இஃது இயற்கை மாறுபட்டுத் தீமை உணர்த்தல். 'ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே' (புறம் ௨௨௯) என்ற பகுதியும்,

**'நடுநாள் வந்து தும்மியும் துவைக்கும்;**
**நெடுநகர் வரைப்பின் விளக்கு நில்லா;**
**துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்;**
**அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்;**
**நன்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்;**
**செம்முது பெண்டின் சொல்லு நிரம்பாது!'** (புறம் ௨௮௦)

என்ற பகுதியும் முன்னுணர்த்தலின் ஒருவகையே என்னலாம்.

**அவல அமைப்பு முறை:**— அவல இறுதி நாடகங்களில் தொடக்கத்திலாவது, இடையிலாவது இன்ப நிகழ்ச்சிகள் அமைக்கப்பட வேண்டும். முடிவுக்கு முன்னும் சிறிதளவு இன்பத்தை அமைத்துப் பின்னர் அவல இறுதியைத்தரும் நாடகமாயின் மெத்தச் சிறக்கும். புகாரிலிருந்தபோது மனைவியொடு மகிழ்ந்துண்டு களித்த நிலை, சின்னாட்கள் இடையீடுபட்டது. ஆயினும் மதுரையில் கோவலன் இறப்புக்கு முன் காதலியிட்ட சோறுண்டு அம்மென் திரையலொடு அடைகாய் உண்டான் என இன்பச் செய்தி கூறிய பிறகன்றோ இளங்கோ அவனைக் கொலைக் களத்துக்கழைக்கிறார்! இவ் வ மை ப் பு முறையாலேயே இவ்வவலம் மிகவும் உள்ளத்தைத் தொடுகிறதென்னலாம்.

**முன்னுணர்த்தல் வேண்டுமா?** துன்பமே பெற்றுக் கிடக்கும் மக்கள் இன்பத்தினைத்தான், காணவும், படிக்கவும் வி ரு ம் பு வ து இயற்கை. கசப்பும் ஒரு சுவை என்பதுபோலத் துன்பியலையும் காணக் கற்கத் துணிகின்றனர். எனவே அவர்கட்கு அவலத்தின் மிகுதித் தன்மையைச் சிறிது தடுத்தே காட்டவேண்டும். அதற்கு முன்னுணர்த்தலைத் தவிர வேறு வழியில்லை. செகப்பிரியர் போன்ற மேலைநாட்டு நாடகாசிரியர்களும் இவ்வவல முன்னுணர்த்தல் முறையைப் பெரிதும் கையாண்டுள்ளனர்.

**சிலம்பில்...!:** இளங்கோவடிகளால் தமிழுக்களிக்கப்பட்ட பாவியம் சிலப்பதிகாரம். ஐம்பெரும் பாவியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் அதனை நாடகப்பாவியம் என யாவரும் ஒப்புகின்றனர். இயலும் இசையும் இணைந்ததன்றோ நாடகம்? எனவே அதனை முத்தமிழ்ப் பாவியம் என்றும் கூறுவர். இச்சிலம்பில் புகார், மதுரைக் காண்டங்களிலேயே எடுத்த செய்தி பெரிதும் முடிவுறுகிறது. வஞ்சிக் காண்டத்தில் கண்ணகிக்குக் கோட்டமெடுப்பித்த துணைக்கதையே கூறப்பட்டுள்ளது. இப்பாவியக் கிளவித்தலைவனின் இறுதி, அவலவிறுதி! எனவே பெரும் பாவலராகிய இளங்கோவடிகள் அவலத்தை முன்னுணர்த்த வேண்டியவரானார். அவ்வாறு அன்னார் முன்னுணர்த்தியவற்றை வகை பிரித்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வெளிப்படை வகை: சிலம்பில் வெளிப்படை வகையான் அவல முன்னுணர்த்தப்பட்ட இடங்கள் மிகச் சிலவே. இவ்வகையின் விளக்கம் முன்னர் தரப்பட்டது.

மாதவியிடமிருந்து மீண்டுவந்தான் கோவலன்; 'சிலம்புள **கொண்ம்'** என்றாள் கண்ணகி; கோவலன் அச்சிலம்பை முதற்பொருளாக வைத்து 'உலந்த பொருளீட்ட' மதுரைசெல்ல எண்ணுகின்றான். மங்கையுடன் மறுநாள் விடியலில் மதுரை புறப்படுதலை,

> 'வினைகடை கூட்ட வியங்கொண்டான் கங்குற்
> கனைசுடர் கால்சீயா முன்' *

என இளங்கோவடிகள் குறிக்கின்றார். இவ்வடிக்கு 'வினையினது ஏவலைக் கொண்டான்' எனப்பொருள் கூறுகின்றார், அடியார்க்குநல்லார். இதனால் பின்னர் நிகழப்போகும் அவலம் தெள்ளிதின் உணரக் கூடுதலின் இஃது வெளிப்படையாக அவலமுன்னுணர்த்தியவாறாயிற்று.

மதுரைக்குப் புறப்பட்டதைக் கூறும் போதும் மீண்டும் அவ்வடிகளையே ஒரு வெண்பாவாக இளங்கோ அமைத்துக் காட்டுகிறார்.

> 'காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
> மாதவி தன் சொல்லை வறிதாக்க - மூதை

*இவ்வாறான வெண்பாக்கள் இளங்கோ புனைந்ததல்ல என்பாருமுளர்.

வினைகடை கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்'

என்பது அவ்வெண்பா. இரண்டாவது முறையும் இவ்வடியை இளங்கோ அமைத்துக் காட்டியமை, பின்னர் நிகழப்போகும் அவலத்தைத் தெள்ளிதின் வெளிப்படையாக உணர வேண்டும் என்பதற்காகவே! 'காதலி கண்ட கனவு' மாதவியின் சொல்லை வறிதாக்குகிற தென்றால் கனவு நடைபெறும் என்பதல்லவா கருத்து? கனவில் கண்டதாகக் கண்ணகி உரைத்ததைக் காண்போம்:

'கடுக்குமென் னெஞ்சம் கனவினால்; என்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டோம்;
பட்ட பதியில் படாத தொருவார்த்தை
இட்டனர் ஊரார்; இடுதேளிட் டென்றன்மேல்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன்; காவலனோ(டு)
ஊர்க்குற்ற தீங்கும் ஒன்றுண்டு'

என்பதக்கனவு! எனவே, இக்கனவும், கனவு வெல்லும் என்ற கருத்துப்பட எழுதிய அடிகளும் வெளிப்படையாக அவலத்தை முன்னுணர்த்துகின்றன. மேலும் நாடுகாண் காதையிலும் 'ஊழ்வினை கடைஇ உள்ளம் துரப்ப' எனக் கூறியமையையும் கொள்ளல் தகும்.

**குறிப்பு வகை:** இவ்வகையில் அவலத்தை உய்த்துணர வைக்குங்கால் நடிகர்களின் உரையாடலில் அவலம் வைத்து உணர்த்தல் ஒரு வகை; ஆசிரியன் தான் கூறுங்கால் அவலம் உணர்த்தல் ஒருவகை; நிகழ்ச்சிகளின் வாயிலாக அவலத்தை உணர்த்துதல் ஒருவகை. இந் நால் வகையானும் சிலம்பு அவல முன்னுணர்த்தியுள்ளது.

**உரையாடல் வாயிலாக:** தேவந்தி என்பவள் கண்ணகியின் தோழியருள் ஒருத்தி. அவள் கண்ணகியை நோக்கிக் கனாத்திற முரைத்த காதையில் 'பெறுக கணவனோடு' எனக் கூறியதாக இளங்கோ சொற்களை அமைத்துள்ளார். தீக்கனவை எண்ணிக் கலங்கிக் கொண்டிருக்கும் கண்ணகியிடம் 'கணவனைப் பெறுக'என்றதாகச் சொல்லமைக்காமல் 'பெறுக கணவனொடு' எனவமைத்தமை குறிப்பான் அவலமுன்னுணர்த்தவே. அச்சொல்லின் பொருள் 'கணவனை நீ

பெறுவாயாக' என்பதாயினும், பின்னர் நிகழ்ச்சிகளைக் கணவனொடு பெறுவாயாக என்ற அவலமும் சொல்லமைப்பில் அமைந்து கிடத்தலைக் காணலாம்.

மங்கலவாழ்த்துப் பாடலிலே, கொடியன்ன குலமகளிர் கோவலன் கண்ணகியை வாழ்த்துகின்றனர். எங்ஙனம்?

'காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
தீதறுக ... ... ...

என்று வாழ்த்துங்கால் தீதுகூறி, அது வாராது நீர் வாழ்க என்பது தமிழ் மரபன்று. எனினும் போதொடு விரிகூந்தற் பொலநறுங் கொடியன்னார் வாழ்த்திய வாழ்த்துரைகளில், பிரிவு,கைஞ்ஞெகிழ்த்தல், தீது ஆகிய தீமைகளைக் கூறி அஃதின்று வாழ்க எனவமைத்ததும் முன்னுணர்த்தவேயாகும். காதலற் பிரிவர் என்றும், கோவலன் சின்னாட்கள் இவளைக் கைஞ்ஞெகிழ்ப்பன் என்றும், தீதொன்று இறுதியில் உண்டென்றும் இதனுணறியலாம்!

மதுரைக்குப் புறப்படுக என்னுமல் 'எழுக' என்ற சொல்லால் அழைத்ததாகக் கூறுவதிலும் நுணித்துக்காணில் அவல முன்னுணர்த்தப்படுவது அறியலாம். புறப்படுதலுக்கும் எழுதலுக்கும் வேறுபாடு மிகுதி! எழுதல் என்பதில் விரைவும் எதிர்ப்பொடு கிளம்புதலும் பொதிந்துள்ளது.

சிலம்பை விற்கப் புறப்படுமுன் கோவலன் 'மாற்றி வருவேன்' எனக்கூறுது 'மாறி வருவேன்'எனக்கூறுவதும் அவல முணர்த்தவே.

அன்றியும் கண்ணகியை இளங்கோ முதன் முதலில் பேசவைத்தது ஒன்பதாவது காட்சியாகிய கனாத்திற முரைத்த காதையில்தான். அவள் முதன் மொழி வருமாறு: பெறுகேன்; கடுக்குமென்னெஞ்சம்' என்பது. இஃது தன்னம்பிக்கையற்ற–மங்கலமற்ற சொல்லும், தொடரும் என்பது வெள்ளிடைமலை. பாவியத் தலைவியின் முதன் மொழி இங்ஙனம் அமையலாகாது என்பதனைக் கற்றவல்லார் உணர்வர். எனவே, இங்ஙனம் அமைத்துக்காட்டியமை அவல முன்னுணர்த்தவே எனக்கோடலில் பிழையென்னை?

புலவர் கூற்றுவாயிலாக: இவ்வகையான் அவல முன்னுணர்த்தப் படும் இடங்கள் சிலம்பில் சிலவே. காரணம், சிலம்பு நாடகபாவியம் இவ்வகையான் வெளிப்படையாகக் கூறியவற்றை முன்னர்க் கண்டோம். இனிக் குறிப்பான் உணர்த்தியவற்றுட் சில காண்போம்.

கோவலன் மாதவிபால் பிரிகிருன்; கண்ணகியின் அழகழி நிலையை இளங்கோ கூறுகிருர். அதில்,

'அஞ்செஞ் சீரடி அணிசிலம் பொழிய'

என்பதோரடி. இவ்வடிக்கு அடியார்க்கு நல்லார், 'சீரடி தன்னையணியும் சிறப்பைச் சிலம்பு பெருதொழிய' என உரைகண்டார். கண்ணகிக்கு இனிச் சிலம்பு பயன்படப் போவதில்லை என்ற அவலம் இவ்வடியான் உணர்த்தப்படுகிறது. உரைப்படி, 'அவள் சிலம்பு இனி, அணியும் சிறப்பைப் பெருது; பாண்டியன் அவையில் அறம் வாழக் கரிநிற்கும் சிறப்பைப் பெறும்' என முன்னுணரலாம்.

மனையறம் படுத்த காதையில் காணப்படும்,

'தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து – நாமம்
தொலையாத இன்பமெலாம் துன்னினுர் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று'

என்னும் வெண்பாவில், நிலையாமை கண்டவர்போல் தொலையாத இன்பமெல்லாம் துன்னினுர் என்றமையும்; மங்கலவாழ்த்துப்பாடலில்,

'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாற் புகழ்மன்னும் கண்ணகிஎன் பாள் மன்னே'

என்ற அடிகளில் தொழுதேத்த என எதிர்காலத்தாற் கூறியமையும், அதே பகுதியில்,

'மாநகர்க் கீந்தார் மணம்'

என்றமையும் அவல முன்னுணர்த்தலெனின், பொருந்தும்!

பொற்கொல்லனைக் கோவலனுக்கு அறிமுகப்படுத்தும் இளங்கோ அவனைக் கூற்றத் தூதுவன் எனக் குறிப்பதும் அவல முன்னுணர்த்தவே.

நிகழ்ச்சிகள் வாயிலாக: கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் செல்கின்றனர். வழியிடையில் களைப்புத்தீரக் கணவனும் மனைவியும் ஓரிடத்தமர்ந்தனர். கவுந்தியடிகள் சற்றெதுங்கி இருக்கி றார். அதுபோழ்து அங்கு இரு வம்பப்பரத்தையர் வருகின்றனர். அவர் கள் கோவலன் கண்ணகியைச் சுட்டிக்காட்டிக் கவுந்தியடிகளிடம் 'இவர்கள் யாவர்?' என வினவ, அனைத்துயிர்களையும் ஒருமுறையில் காணும் துறவற நெறியொழுகும் அடிகள் 'எம்மக்கள்' எனவிடை யிறுத்தார். அதுகேட்ட அம்மகளிர்,

'உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கைக்
கடவது முண்டோ கற்றறிந்தீர் ?'

எனத் தீமொழி கூறினர். 'தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக் காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க'க் கவுந்தியடிகளும் 'முதுநரி யாக!' எனப் பரத்தையர்க்குச் சாவித்தனர்!

கண்ணகி, கணவன் சிலம்பு கன்றிய கள்வன் என்னும் தீமொழி கேட்டுத் தீயோர்க்குத் தீங்கு செய்யப் போகிறாள், பின்னொருநாள்! அதனை இப் பரத்தையர் நிகழ்ச்சி முன்னுணர்த்துகிறது. பரத்தையர் தீமொழி, பாண்டியன் தீமொழி! பரத்தையர் பெற்ற சாவம், பாண்டி நாடழிவு!

அன்றியும் பெற்றோரிடமும் மற்றோரிடமும் மதுரைக்குப் பறப் பட்டதனைத் தெரிவியாமையும், 'மாடமதுரையகத்துச் சென்று உலந்த பொருளீட்டலுற்றேன்' என்றபோது மீண்டும் நன்னிலையெய்தியபின் பூம்புகார்க்கு மீளலாம் எனக் கூறியதாக அமைக்காமையும், இருளிற் கிளம்பியதாக இயம்பியமையும் அவல முன்னுணர்த்த அமைத்த நிகழ்ச்சிகளே எனக் கொள்ளலாம்.

வண்ணனைகள் மூலமாக: மதுரை நகரின் அகழியின் புறத்தே வலமாகக் கோவலனும் கண்ணகியும் சுற்றிச் சென்றகாலை அகழியின் இயற்கையை அடிகள் வண்ணிக்கிறார். கோவலனும் கண்ணகியும் அடையப்போகும் துயரை அறிந்து, குவளையும் ஆம்பலும் தாமரையும் கண்ணீர் கொண்டனவாம் (கள்ளாகிய நீரைக் கொண்டன) கால்கள் தள்ளாடினவாம் (காலுற = காற்றுப்பட என்பதும் பொருள்). வண்டு கள் பரிந்து குரலெழுப்பினவாம்!

'வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர்க் கரந்தனள்.........'

என்ற பகுதியில் வையை கண்ணகிக்கு வரப்போகும் இன்னலை முன்னர் உணர்ந்தவளைப்போல் மலராகிய ஆடையால் தன்னை மறைத்துக் கொண்டு உள்ளே கண்ணீர் வடித்தனள், எனக்காணும் வண்ணனை அவல முன்னுணர்த்துகிறது எனத் தெள்ளிதினுணரலாம்.

அன்றியும் மதுரை வாயில் நெடுங்கொடி ஆடுதலை இளங்கோ,

'... ... ... ... ... ... எயில் நெடுங்கொடி,
வாரல்என் பனபோல் மறித்துக் கைகாட்ட'

என வண்ணிப்பதும் அவலமுன்னுணர்த்தலே ஆகும்.

முடிப்பு: மேலே கூறிய செய்திகளனைத்தும் அவல முன்னுணர்த்தவென்பது சிலப்பதிகாரத்தை இரண்டாம்முறை படிக்கும் பொழுதுதான் தெளிவாகும். கண்ணகியின் உடனிருந்த தோழியாகிய தேவந்திக்கே கண்ணகியின் கனவிலிருந்த அவலம் அப்பொழுதே உணர முடியவில்லை. இதனைக் கண்ணகியின் கோட்டக் கடவுண் மங்கல நாளன்று அத்தோழியே 'தீக்கனாக் கேட்டநாள் எய்த உணரேன்' எனக் கூறியதிலிருந்து அறியலாம். இளங்கோவடிகள் அவலத்தை முன்னுணர்த்தியுள்ளாரா என்ற கண்ணோட்டத்தில் சிலம்பைப் படித்தால் மேலும் பல இடங்களில் முன்னுணர்த்தலை அறியலாம்.

இங்ஙனமெல்லாம் நாடகவிலக்கணத்திற்குக் குறைவு படாமலும், சுவையிற் குன்றாமலும் சிறந்த நாடகபாவியம் தந்த இளங்கோவடிகளின் புகழ் வாழ்க; வளர்க !

## உறுப்பினர் கவனத்துக்கு . . . .

முகவரி மாற்றம் வேண்டும் உறுப்பினர்கள் தங்கள் பழைய முகவரியையும் தெளிவாக எழுதுவதுடன் தம் உறுப்பினர் எண்ணையும் தவறாமல் குறிப்பிடுதல் வேண்டும்.

இதழ் வெளியாகும் நாளுக்கு ஐந்துநாள் முன்னதாக வரும் வேண்டுகோள்கள் மட்டுமே ஏற்கப்பட்டு முகவரி மாற்றப்படும். ஏனையவை அடுத்த திங்களில்தான் மாற்றப்படும். —அமைச்சர்.

இரா. இளவரசு.

# தங்கைக்கு....!

விடியுமுன் அல்லி விழியை மலர்த்து!
வீட்டை வெளியைத் துலக்குக நன்றே!
படியுதல் வேண்டும் பின்தூங்கி முன்னெழும்
பழக்கம் உனக்குப் பைங்கிளி இன்றே!

விண்மீன் கூட்டம் விரைந்தோடி வந்து
வீட்டின் முன்னே விழுந்ததோ என்ன
மண்மகள் சிரிக்க மாவினுற் கோலம்
வகைவகை யாகத் தீட்டுக கண்ணே!

பொன்துகள் வாரிப் புவியெலாம் வீசிப்
பொங்கும் கடலுள் புகுந்திடும் கதிராய்
நின்முகம் ஒளிர மணப்பொடி நீக்கி
நீராடு கையிற் பூசுக மஞ்சள்!

வெள்ளை மல்லிகைக் குள்ள மணங்காண்!
விழியைப் பறிக்கும் வெறிநிறம் உண்டோ?
உள்ளம் பண்பால் மணம்பெறல் வேண்டும்!
உடையிற் பகட்டால் உறுபயன் இல்லை!

தும்பைப் பூப்போல் சோறு சமைக்க!
சுவைசுவை யாகக் கறிகள் படைக்க!
அம்புவி எங்கும் ஆரே இவள்போல்
அடிசில் படைப்பார் எனும்புகழ் பெறுக!

சோம்பலை நீக்கு, சுறுசுறுப் பாயிரு,
துள்ளித் திரியும் புள்ளிமான் நீயே !
தேம்பலைப் போக்கு, திண்ணிய நெஞ்சுகொள் !
சிரித்து மகிழ்வாய், செந்தமிழ்ச் சிட்டே !

வெள்ளரிப் பழம்போல் இனியசொற் பேசு !
வேப்பங் காய்ச்சொல் விலக்குக, மாசு !
பிள்ளையுன் நடத்தை பேச்சினைப் பார்த்துப்
பெற்றவர் நெஞ்சம் குளிர்ந்திட வேண்டும் !

வன்பெனும் செந்தீ வாழ்வைப் பொசுக்கும்,
வஞ்சகம் பொய்மை பொறாமை வளர்க்கும்,
அன்பெனும் ஊற்றால் உலகம் தழைக்கும்;
அன்பினால் மற்றவர் நெஞ்சினை அள்ளுக !

ஆற்றை நிலவை அளவிலாப் பொருள்தரும்
அன்னை நிலத்தைப் புலவர்கள் பெண்ணாய்ப்
போற்றுவ தெதனால் ? வேற்றுமை இன்றிப்
புவிமிசை உயிர்களைப் புரப்பதா லன்றோ ?

கதிரவன் ஒளிமுன் காரிருள் உடையும்,
கற்பவை கற்றால் அறிவு வளரும்,
இதுவரை உலகம் பயன்பெற வாழ்ந்த
ஏந்திழை யார்தம் வாழ்வை அறிக !

இன்றுநீ நெஞ்சில் இடுகிற வித்தே
எதிர்கா லத்தில் காய்கனி நல்கும் ;
இன்றே பூம்பொழி லாகுக நெஞ்சம் !
எண்ணிலா மணமலர் பூத்துப் பொலிக !

தாய்மைப் பேறே தனிப்பெரும் பேறும்;
தங்கையே ! நாளைத் தாயல் லவோநீ ?
சேய்மை வளர்ப்பில் உலகை வளர்க்கத்
தெரிந்து கொள்நீ, தீந்தமிழ்க் குயிலே !

மூத்த மகளிர் மொழியை மறந்தனர்,
முழுமை மடமைச் சிறையில் முடங்கினர்,
பூத்தெழும் பிறையே ! புரட்சி வெடித்திடப்
புத்தொளி பாய்ச்சுதல் நின்கட னன்றோ ?

உயிர்முத லாகும் தமிழினைப் போற்று !
உன்னெழில் கூடும், இல்லையோ வாடும் !
பயிரிற் படிந்த பசுமையாய் நெஞ்சில்
பைந்தமிழ் துயின்றால் உடல்வளம் எய்தும் !

——:o:——

புலவர். கு. கறுப்புச்சாமி., தாராபுரம்.

# இலக்கிய அமைப்புகளின் நோக்கும் போக்கும்

ஒரு நாட்டின் தொன்மை, பண்பாடு, பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறை, நன்னெறி, குறிக்கோள் முதலானவற்றை அந்நாட்டின் இலக்கியங்களைப்போலத் தெளிவாக உணர்த்தும் கருவிகள் வேறு இல்லை எனலாம். இறந்தகால வாழ்வை நினைவூட்டி, நிகழ்கால வாழ்வை விளக்கி, எதிர்கால வாழ்விற்கு வழி காட்டுவன இலக்கியங்களே. தனி மாந்த வாழ்க்கை, குடும்பவாழ்க்கை, குமுகாய வாழ்க்கை, அரசியல்வாழ்க்கை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று இன்னோரன்ன உயிரியல்புப் பண்புகளில் தூய்மையும், உயர்ந்த நோக்கும் அமைந்து அவை ஒளிபெறத்துணைசெய்வனவும் இலக்கியங்களே.

இன்னபிற சிறப்பியல்புகள் வாய்ந்த இலக்கியங்களைப் போற்றுவதும், அவற்றின் மரபுவழி நின்று புதிய துறைகளில்–புதிய முறைகளில் உலக வளர்ச்சிக்கேற்பப் புதிய இலக்கியங்களைப் படைப்பதும் அறிவில்–நாகரிகத்தில் வளர்ச்சி பெற்றுள்ள மக்களின்–நாட்டின் இன்றியமையாக் கடமைகளாகும்.

நம் நாட்டின் இலக்கியங்களைச் சமயக்கருத்தை மையமாகக் கொண்ட சமய இலக்கியங்கள், நடைமுறை வாழ்வியற் கருத்தை மையமாகக் கொண்ட பொது இலக்கியங்கள் என இருவகையாகக் கொள்ளலாம். சமய இலக்கியங்கள், பழங்கதை, வரலாறுகள் முதலானவற்றைப் பரப்பவும் அவற்றின்பால் மக்களை ஈடுபடுத்தவும், சமய அமைப்புகளும் அவை சார்ந்த இதழ்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மற்றும் அவற்றிற்குத் துணையாக, புதிய முற்போக்கு எழுச்சிகளைத் திசை திருப்பவும், காலத்திற்கேற்ற கருத்துகளைக் கொண்ட இலக்கியங்களை—எழுத்தாளரை—பாவலர்களைப் புறக்கணித்து மறைக்கவும், வாழ்விற் கொவ்வாத மூடப்பழக்க வழக்கங்களை—குருட்டு நம்பிக்கைகளை வளர்க்கும் பழங் கதைகளைப் பாராட்டவும் பரப்பவும் எவ்விதக் கருத்துவேறுபாடும் இன்றி இந்நாட்டில் செல்வாக்குள்ள ஏடுகளான தினமணி, மித்திரன், ஆனந்தவிகடன், கல்கி, கலைமகள், மஞ்சரி முதலானவை கட்டுப்பாடாகச் செயல்பட்டு வருகின்றன.

இன்றைய நிலையில் தமிழ்மொழி பல்வேறு துறைகளில் புதுப் புது வளர்ச்சியைப் பெறுதற்குப் பலரும் பலவகையான அறிவுரைகளைக் கூறி வருகின்றனர். அவர்களுள் ஒருசிலர், "தமிழ் வளம்பெறப் பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து எழுதவேண்டும். பிற மொழி நூல்களைத் தமிழில் ஆக்கம் செய்யும் போது ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தூய தமிழ்ச்சொல்லைத் தேடிப் போடாமல் கூடுமான வரை அந்தந்தச் சொற்களை அப்படியப்படியே போட்டுவிடவேண்டும். புதினங்கள் சிறுகதைகள் முதலானவை எளிய மக்களின் பேச்சு நடையிலேயே—கொச்சை நடையிலேயே அமையவேண்டும். தமிழ் இலக்கண விதிகள் தமிழ்மொழி வளத்துக்கும் வளர்ச்சிக்கும் பெருந்தடையாக உள்ளன. அவ்விலக்கண விதிகளைப் புறக்கணித்துவிட வேண்டும்! அப்பொழுதுதான் தமிழ் தங்குதடையின்றி வளரும்; வாழும்" என்பன போன்ற 'அரியபெரிய'—இதுகாறும் மொழி வல்லுநர்கள் எவரும் கூறாத—கூறத்தோன்றாத புதிய 'அறிவுரை'களை வாய்ப்புக் கிடைக்குமிடங்களிலெல்லாம் பரப்பி வருகின்றனர். அவர்கள் தாங்கள்தாம் உண்மையான தமிழ்த்தொண்டர்கள் என்றும், முற்போக்கு எழுத்தாளர்கள் என்றும், பேச்சாளர்கள் என்றும், தங்களால்தான் தமிழ் வளரும், வாழும் என்றும் கூறிக்கொள்கின்றனர். ஏன் இவ்வாறு கூறுகிறார்கள்? இவர்கள் நோக்கம் யாது ?

தமிழ் வளர்ச்சிக்கு இன்னோரன்ன அறிவுரை கூறுபவர்களுள் ஒருவரான பேராசிரியர் சீனிவாசராகவன் தாம் எழுதியுள்ள 'காவிய அரங்கில்' என்ற நூலுள் ''பிரபஞ்சத்தின் சப்த விசித்திரங்கள், அப்ராக்ருத சக்தி, துவந்தயுத்தம், சுத்தசைவ போஜன சம்பிரதாயம், விசித்ரகதி, அபூதபயங்கரம், பூதாகாரம், அப்ராக்ருத சௌந்தர்யம், விசுவவெளி, குசலப்பிரச்சனம், பிரமாண்டமான ஆகிருதி'' என்பன போன்ற பொருளறிய முடியாத வடசொற்கள் பலவற்றை எடுத்தாண்டுள்ளார். இப்படி வலிந்து இழுத்து வடசொற்களைக் கையாள்வது ஏன்? இப்படி எழுதினாற்றான் பொதுமக்களுக்கு விளங்குமா? தமிழ் வளருமா? இப்படி எழுதுபவர்கள்தாம் தமிழை வளர்ப்பார்களா? இல்லை! இவர்கள்தாம் ''உடன்பிறந்தே கொல்லும் நோயைப்போல்'' உடன் பிறந்தே தமிழை அழிக்கும் உட்பகைவர்கள்!

இத்தகு சூழ்நிலையில் வாழ்வில் மேற்கொள்ளத்தக்க விழுமிய கருத்துகளைக் கொண்ட சமயச் சார்பற்ற முற்கால-இக்கால இலக்கியங்களைப் பேணவும்-பரப்பவும், மொழிப் பகைவர்களின் முகத்திரையைக் கிழித்து அவர்தம் நோக்கத்தை வெளிப்படுத்தி, அவர்களால் மொழிக்கு ஏற்பட்டிருக்கும்-ஏற்படவிருக்கும் கேடுகளை நல்லவர்க்கும் வல்லவர்க்கும்-யாவர்க்கும் உணர்த்தவும், பல்வேறு நாடுகளில் முகிழ்த்து வளர்ந்துவரும் புதுப்புதுத் துறைகளின் வளர்ச்சிகளையும், நோக்கங்களையும், பயன்களையும் அறிந்து அவற்றோடு ஒட்டி முன்னேற வேண்டுமென்ற உணர்ச்சியை-முயற்சியை மக்களிடையே தோற்றுவித்து வளர்க்கவும் மொழி-இலக்கியங்களின் பெயரால் அமைப்புகள் மிகமிகத் தேவையாகும்.

மக்களால் விரும்பப்படும் சமய இலக்கியங்களை மொழி-இலக்கிய அமைப்புகள் புறக்கணித்துவிட வேண்டுமா? எனின் அங்ஙனமன்று! அவற்றை வளர்க்க-பரப்பச் சமய அமைப்புகளும் அவைசார்ந்த விளம்பரக் கருவிகளும் உள்ளன. அளவிற்கு மிகுதியாகவே அவை மக்கள் மன்றத்தில் பரப்பப்பட்டு விட்டன. வாழ்விற்குத் தேவையான உணர்வுகளை வழங்கும் பொது இலக்கியங்கள் சமயச் சார்பாளர்களாலும் அரசியல் இயக்கத்தாலும் கறிவேப்பிலையாகப் பயன்படுத்தப்படுகின்றன. தாயற்ற சேயின் நிலையிலுள்ள அவ்விலக்கியங்களைப் போற்றுவதும், அவைகாட்டும் நெறியிலே மக்களை ஈடுபடச்செய்வதும், உலகின் வளர்ச்சிக்கேற்பப் புதிய துறைகளில்-புதிய முறைகளில்

இலக்கியங்களைப் படைப்பவர்கட்கு ஊக்கமளிப்பதும் மொழியமைப்பு களின் தலையாய நோக்கமாக-பணியாக இருக்கவேண்டும் என்பதே யாம். ஏனெனில் இப்பணிகளை மேற்கொள்ளச் சமய அமைப்புகளும் அரசியல் அமைப்புகளும் முன்வரா.

இற்றை நாளில் தமிழகத்தில் சிற்றூர்கள், பேரூர்கள், நகரங்கள், பெருநகரங்கள் எங்கணும் தமிழ் இலக்கிய மன்றம், தமிழ் இலக்கியப் பேரவை, திருவள்ளுவர் கழகம், குறள்நெறி மன்றம் என்பனபோன்ற பெயர்களில் மொழி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற் றில் ஒருசில அரசியல் இயக்குச் சார்புடன் செயல்படினும் பெரும்பாலா னவை தமிழ்இலக்கிய வளர்ச்சி நோக்குடன் செயல்பட்டு வருவனவாம். அவற்றைச் செயல்படுத்துபவர்கள் மொழியார்வமிக்க இளைஞர்கள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள்-குறிப்பாகத் தமிழாசிரி யர்கள் முதலானோராவர்.

அன்னார் அவ்வமைப்புகளின் சார்பில் ஆண்டுவிழா, இலக்கிய விழா, புலவர்கள்விழா, கருத்தரங்கு, பாட்டரங்கு, பட்டிமண்டபம் முதலானவை நடத்துகின்றனர்; பேராசிரியர்கள், பெரும்புலவர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் பலரை அழைக்கின்றனர். பயன்? பொழுதுபோக்கு! தமிழ்ப் பகைவர்க்கு ஆக்கம்! செயல்படுபவர்க்கு ஒருவகையில் விளம்பரம்! ஏன்?

இற்றைநாள் உலகம் விளம்பர உலகம். விளம்பரமின்றி எந்த அமைப்பும் சிறப்படைய முடியாது. விளம்பரப் பொருள்கள் அனைத் தும் தமிழ்ப் பகைவரிடத்தும் அவர்தம் புரப்பாளர்களிடத்துமே அகப் பட்டுக் கிடக்கின்றன. எனவே, விரும்பியோ விரும்பாமலோ தமிழ்ப் பகைவர்களை மேடையேற்றவும், அவர்களைப் பாராட்டவும், பொன் னாடை போர்த்தவும், உண்மையான தமிழ்த் தொண்டர்களைப் புறக் கணிக்கவுமான நிலைக்கு மொழியமைப்பைத் தொடங்கிச் செயல்படுப வர்கள் உந்தப்பட்டு விடுகிறார்கள். தமிழ்ப் பகைவர்களோ கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தமிழுக்கும் தமிழர்க்கும் நலம் பயப்பன என்ற பெயரில் தீங்கிழைக்கும் கருத்துகளைத் துணிந்து சொல்கிறார் கள்; சொல்லியபடியே செயல்படுகிறார்கள். உயர்ந்த நோக்கத்தொடு- எண்ணத்தோடு செயல்படத் தொடங்கியவர்களோ நல்லனவற்றைச் சொல்லவும் அச்சங்கொண்டு மனச்சான்றுக்கு மாறாகப் பேசுகிறார்கள்!

செயல்படுகிறார்கள்! தங்கள் மாற்றத்திற்குப் புதுப்புது விளக்கங் கூற வும் தொடங்கி விடுகிறார்கள்! என்னே இவர்கள் நிலை!

இவ்வவல நிலைக்கு ஆட்படுபவர்கள், அரசினர் அலுவல்களில் உள்ள இலக்கியப் பேச்சாளர்கள் தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழாசிரி யர்கள். இவர்களில் தமிழ்ப் பேராசிரியர்கள் தமிழாசிரியர்கள் நிலை தான் மிகமிக இரங்கத்தக்கது! ஏனெனில் இவர்கள்தாம் மொழியின் பெயரில் வாழ்க்கையை நடத்துபவர்கள். இவர்கள் உண்மையான தமிழுணர்வுடையவர்கள் என்று நாடு நம்புகிறது! இவர்கள் நற் பணியை எதிர்நோக்குகின்றது !

தமிழாசிரியராகப் பணியாற்றுபவர்களை இருபிரிவினராகக் கொள்ளலாம். ஒரு பிரிவினர் தொழிலையே நோக்கமாகக் கொண்டு மொழியைப் பயின்று பட்டம்பெற்றுத் தொழிலுக்கு வந்தவர்கள். இவர்கள் தாமுண்டு, தம் பணியுண்டு என்றிருப்பர். இவர்களால் தமிழுக்கு நன்மையுமில்லை; தீமையுமில்லை. பிறிதொரு பிரிவினர் மொழியார்வத்தாலும், இலக்கிய உணர்வாலும் உந்தப்பட்டு தமிழைப் பயின்று பட்டம்பெற்றுத் தொழிலுக்கு வந்தவர்கள். இவர்கள்தாம் மன்றங்கள் காணவும்,பிற மன்றங்கள் நடத்தும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும், கட்டுரை பாடல்கள் தீட்டவுமான வழிவகைகளில் செயல் படத் தொடங்குகின்றனர். தொடங்கியவுடன் விளம்பரத்தின் இன்றி யமையாமையை உணர்கிறார்கள். விளம்பரம்பெற வேண்டுமென்ற- வாய்ப்புகள் பெறவேண்டுமென்ற ஆவல் உள்ளத்தே முகிழ்த்தவுடன் அதற்கேற்பச் செயல்படும் நிலைக்கு விரைவில் வந்து விடுகிறார்கள் ! இந் நிலைக்கு வந்தவர்கள் எங்ஙனம் குறிக்கோளுடன் செயல்பட முடி யும்? அம் மட்டோ! உண்மையான தமிழ்த் தொண்டர்களையும், தமிழ் மொழியையும், தாழ்வு படுத்திக் குறை கூறுவதைக் காணுமிடத்தும்- செவிமடுக்குமிடத்துங்கூட ஊமைகயராக இருக்க வேண்டிய நிலை அவர்கட்கு ஏற்பட்டு விடுகின்றது. (ஓரிருவர் விதிவிலக்காக இருக்க லாம்). இல்லையேல் ''மறைமலையடிகள் தமிழும் ஒரு தமிழா?'' ''மு. வ. புதினமும் ஒரு புதினமா?'' ''பாரதிக்குப்பின் தமிழ்ப் பாவலர் கள் உளரா?'' என்று துணிந்து வெளிப்படையாகவே பேசவும் எழுத வும் ஒருசிலர் முன்வருவார்களா? ஆட்சிமொழிக்காவலர் கி. இராமலிங்க னாரிடத்து நேரிலேயே ''தமிழ் ஒரு பைசாச மொழி'' என்று ஒரு போலிப் பண்டாரத்திற்குச் சொல்லத் துணிவு வருமா?

இப்படிக் கூறுமிடத்து ஒருசிலர் எம் மீது சீறிப்பாய்வர். அவர்களை நான் கேட்கிறேன் உலகப் பொதுமறையாம் திருக்குறளின் உயர்ந்த நோக்கங்கள், கருத்துகள், கழக இலக்கியச் சால்புகள், பயன்கள் இவைபற்றி ஒருசிலா நூல்கள் எழுதியதும் இதழ்களில் கட்டுரைகள் எழுதியதும் அன்றிப் பொதுமக்களிடத்தே-கல்வியறிவில்லாத எளிய மக்களிடத்தே அவற்றைப் பரப்ப நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிதான் என்ன? மொழியமைப்புகளின் சார்பில் நடத்தப்பெறும் விழாக்களில், கருத்தரங்குகளில், பாட்டரங்குகளில், பட்டி மண்டபங்களில் அவற்றிற்கு முதன்மை கொடுத்ததுண்டா? ஓரோவழி இருப்பினும் 'இயற்கை', 'காதல்' 'ஊழ்' என்பனபோன்ற வகைகளில் அமைத்துக் கொண்டதன்றிக் குமுகாயம், அரசியல், பொருளியல் போன்ற வகையில் வாழ்விற்குத் தேவையான கருத்துகளை மக்கள்முன் வைத்ததுண்டா? வாழ்விற்கு ஒளிதரும், நன்னெறிகாட்டும் கருத்துவளம் கழக இலக்கியங்களில்—திருக்குறளில் இல்லையா? இக்காலத்திற்கு அவை கூறும் கருத்துகள் ஒவ்வாவா? ஏன் அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்க வேண்டும்? அண்மையில் வாழ்ந்து மறைந்த பாவேந்தர் பாரதிதாசன் எந்தவகையில் எந்தப் பாவலரை விடத் தாழ்ந்தவர்? அவர் பாடல்கள் இன்றையச் சூழ்நிலையில் நம் நாட்டிற்குத் தேவையற்றவை என்று சொல்ல முடியுமா? பாரதிதாசன் பாடல்கள் ஒருசில குறைபாடுடையவை என்று சுட்டிக்காட்டப் படுமாயின் அதுபோன்ற மிகுதியான குறைபாடுகளைப் பாரதியார் பாடலிற் காட்டமுடியுமே! பாரதியாரைப் பாராட்டும் தமிழ்ப் பற்றுளர்களே, நீவிர் பாரதிதாசனைப் புறக்கணிப்பதேன்? பாரதிதாசன் பாடல்களைக் கரைத்துக் குடித்திருப்பதாகக் கூறிக்கொள்ளும் இளம் புலவர் ஒருசிலரும் அவர் பாடல்களைக் கையாளும்போது இயற்கையழகு, காதல் இவற்றோடு நழுவிவிடுவது ஏன்? மொழியுணர்வு, குமுகாய நலம், பொருளியல் சமவுடைமை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, உழைத்து உழைத்து உருக்குலைந்த இந்நாட்டுத் தமிழ் மக்கள் நிலை— இன்னபிற கருத்துகளைப் பற்றிப் பாவேந்தர் பாடவில்லையா? ஏன் அவற்றைப் பற்றிக் கருத்தரங்குகளில் பாட்டரங்குகளில் பட்டி மண்டபங்களில் பேசுவதில்லை? சமயங்கட்கும் பழங்கதைகளுக்கும் தாவித்தாவி ஓடுவது ஏன்? அவற்றைப் பரப்ப, உங்களை விட்டால் வேறு ஆட்கள் இலரா? மறைந்து கிடந்த அவற்றை இப்போதுதான் நீங்கள் புதிதாகப் பரப்புகின்றீர்களா? அப்படியே இருப்பினும் கிருபானந்தவாரியும், கிரிதாரிப்பிரசாத்தும் போதுமே! அவர்களை விடவா

நீங்கள் பழங்கதை விரிப்புச் செய்யப் போகிறீர்கள்? 'புதிய நோக்கில் அவற்றை அணுதுகிறோம்' என்பீராயின், 'மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமை யில்லை' என்று பாடிய பாரதியார் எள்ளி நகையாட மாட்டாரா?

அருமை நண்பர்களே! மொழித்தூய்மை, செவ்விய தமிழ் நடை, தரமான இலக்கியங்கள், புதினங்கள், சிறுகதைகள் இவை பற்றிய தெளிந்த கருத்துகளை மக்களுக்கு உணர்த்தியதுண்டா? தமிழ்ப்பகைவர்களை அழைத்து விளம்பரம்பெற நினைத்த தன்றித், தமிழ்த்தொண்டினையே தலையாய நோக்கமாகக் கொண்டு பல இடையூறுகட் கிடையே செயல் பட்டுவரும் தமிழ் முனைப்புடையவர்களை இதழாசிரியர்களை பேச்சாளர்களை அழைத்துப் பாராட்டிய துண்டா? மாலை போடுவதும், மாலை பெறுவதும், செய்தித் தாள்களில், வானொலியில் பெயர் வரச்செய்வதுமதாம் தமிழ்த்தொண்டென்றால் உங்களைவிடச் சோற்றுக்குத் தமிழ் படித்தவர்கள் எவ்வளவோ மேலானவர்கள் என்று சொல்லலாம். எவ்வாறெனில் அவர்களால் தமிழ் கெடுவதில்லை; தமிழ்ப்பகைவர்கள் ஆக்கம் பெறுவதில்லை!

மொழி - இலக்கிய அமைப்புகள் கண்டு - கலந்து செயல்பட்டு வரும் உண்மையான தமிழன்பர்களே! கற்றவர்கள், கல்லாதவர்கள், ஆர்வமுள்ள இளைஞர்கள், உழைப்பாளித் தோழர்கள் முதலானோரிடத்து, இலக்கிய உணர்வை மொழியுணர்வைப் பரப்ப-வளர்க்க மொழியமைப்புகளை விட வேறு அமைப்புகள் இந்நிலையில் எதுவுமில்லை, எனவே அவற்றின் வாயிலாக, நிமிர்ந்து நின்று விளம்பரம் கருதாது செயல் படுவீர்களாக! தமிழ்த்தாய் உங்கள் பணியைப் பேராவலோடு. எதிர்நோக்கி நிற்கின்றாள்! இயலவில்லையாயின் தொழில் செய்வதுடன் அமைதியாக இருப்பீர்களாக! அதுவே நீவிர் தமிழுக்கும் தமிழர்க்கும் செய்யும் நற்றொண்டாகும். நல்லது செய்தல் ஆற்றீராயினும்-அல்லது செய்தல் ஓம்புமின்' என்பது ஆன்றோர் கூற்று.

"விருப்பத்தை நிறைவேற்ற முயலுங்கால் வையம்
வெறுந்தோற்ற மென்னுமொரு வேதாந்தப் பேச்சேன்?
மரத்தடியுல் மறைந்துநின்று வாலியினைக் கொன்ற
மட்டமுறு கருத்துக்கள் இப்போது வேண்டா!

உரத்தினிலே குண்டுபுகும் வேளையிலும் மக்கள்
உயிர்காக்கும் மனப்பான்மை உண்டாக்கவேண்டும்.
பெருநிலத்தோர் எல்லாரும் ஒருதாயின் மக்கள்
பிறர்தமர்என் றெண்ணுவது பேதமையே யன்றோ?"

"பொதுமக்கள் நலம் நாடிப் புதுக்கருத்தைச் சொல்க!
புன்கருத்தைச் சொல்லுவதில் ஆயிரம்வந் தாலும்
அதற்கொப்ப வேண்டாவே! அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை?
ஏற்றசெயல் செய்தற்கும் ஏன் அஞ்ச வேண்டும்?
உதிர்த்திடுக பொன்மலர்கள் உயர்கைகள் நன்றே
உணர்ந்திடுக உளங்கவரும் புதுமணத்தை யாண்டும்"

– பாவேந்தர்.

# முகவர்கள் கவனத்திற்கு ...

ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5 ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்து விடுக!

பணம் விடுக்கும் பொழுது தேவையான படிகள் பற்றியும் பிற வற்றையும் விளக்கமாகக் குறிப்பிடுதல் இன்றியமையாததாகும்.

தென்மொழிக்கும் தமிழ்ச்சிட்டுக்கும் சேர்த்துப் பணம் விடுப்பவர்கள் தனித்தனியே அவற்றைத் தெளிவாக எழுதுவதுடன் பட்டியல் எண், நாள் முதலியவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

முன்பணம் கட்டுபவர்களும், விற்பனை முன் பணம் அனுப்புபவர்களும் அவற்றை விளக்கமாக எழுதுதல் வேண்டும்.

படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால் இடையில் நேரும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.

தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே தெரிவித்தல் வேண்டும்.

-அமைச்சர்

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? — முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு !

## 'பெரியாரும் காங்கிரசும்'

ஆசிரியர்: **வி. எம். கே. சகுந்தலா.**

கிடைக்குமிடம்: **11, கம்பட்ட விசுவநாதன் வடக்கு வீதி.**
**குடந்தை (கும்பகோணம்.)**

விலை: **10 காசு.** பக்கங்கள்: **32.**

பொங்கல் வெளியீடாக வருவது இந்நூல். இன்றையத்தமிழகத்தில் ஏற்பட்டு வரும் குமுகாய மலர்ச்சியையும், அதற்கடிப்படையாக விளங்கும் பெரியார் ஈ. வே. இரா. அவர்களின் முயற்சியையும் படம் பிடித்துக் காட்டுகின்றார் இந்நூலின் ஆசிரியர்.

நாடு, மொழி, இன அமைப்புகளில் தமிழரைக் கப்பியிருந்த ஆரியஇருள், பெரியார் என்னும் பகுத்தறிவுப் பகலவனால் எவ்வாறு

விலகி வருகின்றது என்பதை விருப்பு வெறுப்பின்றி எடுத்துக் காட்டுகின்றது இந்நூல். தன்மானத்தோடும் தமிழர் உணர்வோடும் எழுதப் பெற்ற இந்நூல், நடுநிலையோடு இன்றைய அரசியலையும் அதைக் குழப்பிக் கொண்டு வரும் பார்ப்பனரின் இரண்டகத்தையும் ஓரளவு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இந்தியாவில் இன்றுவரை பல்வேறு அரசியல் புரட்சிகள் நடந்தாலும் அவையாவும் வெறும் அரசியல் நலங்கருதி மட்டும் செய்யப் பெற்றவை அல்ல என்றும், அவையத்தனைக்கும் குமுகாய, இன அடிப்படைகளே காரணங்கள் என்றும் இந்நூலில் தெளிவாக்கப் பட்டுள்ளன. சூடும், ஒளியும் நிறைந்த சொற்களாலும் கருத்துகளாலும் துணிவோடு எழுதப்பெற்றிருக்கும் இந்நூல் தேர்தல் பூசல்கள் ஊடாடும் இக்கால் வருவது பெரிதும் சிறப்புடையது.

இடக்கரடக்கலாகக் கூறவேண்டிய சில சொற்களை வெளிப்படையாக எழுதியிருப்பது, ஆசிரியரின் பெண்பாற் றன்மைக்குச் சிறிது இழுக்கேனும் அவற்றால் அவர் உளக்கொதிப்பை உணர முடிகின்றது.

மொழியுணர்வும் அறிவும் பரவிவரும் இந்நேரத்தில் இது போன்ற நூல்களின் நடை தனித்தமிழில் அமையாமல் இருப்பது பெரிதும் வருந்துதற்கும் நாணுதற்கும் உரியது. ஆரியத்தால் இன நிலையில் தன் மானமிழந்து தாழ்ச்சியுற்ற தமிழர், தம் உணர்விலும் போக்கிலும் வீறு பெற்ற இக்காலத்துத் தாம் எழுதும் நூல்களிலும் அவ் வாரிய மொழிக் கலப்பை அறவே விட்டொழிப்பதுதான் சரியான தன்மானம் வரப்பெற்றதற்கு அறிகுறியாகும். அஃதன்றி மொழியளவில் அடிமைப்பட்டு இன அளவில் தன்மானம் பெறுவது என்பது, உளத்தளவில் பெண்டன்மை வாய்ந்த பேடி ஒருவன், உலகளவில் ஆண்டன்மை வாய்ந்தவன் போல் நடந்து கொள்வதற்கே ஒப்பாகும். இதைத்தான் பெரியார் உட்பட்ட தன்மானமுள்ள தமிழர் யாவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றோம்.

மற்றப்படி ஓரிரண்டு எழுத்துப் பிழைகளைத் தவிர நூல் செப்பமுற எழுதப் பெற்றுள்ளது. அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுமென்பதற்காக மிகவும் குறைவான விலையில் விற்கப் படுவது பாராட்டத் தக்கது. ஆசிரியரின் முயற்சி ஊக்கத் தக்கது.

-கீரன்.

# கண்ணப்பன் கிளிகள்

இயற்றியவர்: தமிழ் ஒளி
கிடைக்குமிடம்: பாரி நிலையம். 59 பெருவழி. சென்னை - 1
விலை: உருபா ஒன்று.

குற்றம், குணம் என்பவற்றைப் பெண் கிளியாகவும் ஆண் கிளியாகவும் உருவகம் செய்யப் பெற்றுள்ள இந்நூலின் முகப்பில் நூல் நுதலும் பொருளாகக் கூண்டுக் கிளிகள் போலக் குற்றம் குணம் என்னும் இரண்டும் ஒருவரிடத்து அடுத்தடுத்தே இருக்கு மென்றும், மக்கள் குற்றத்தைப் பொறுத் தருளவும், குணத்தைப் பாராட்டவும் செய்தல் வேண்டும் என்றும் நூலாசிரியர் கூறுகின்ருர். ஆயின் நூலின் பிற்பகுதியில் நூல் நுதலிய பொருள் முற்றுப் பெற்ற பின்னும் தொடர்ந்து சென்று பின் இறுகின்றது.

ஒற்றைக் குரலுக்குக் காலமில்லை–பலர்
ஊளைக் குரலுக்குக் காலமம்மா
கற்ற தெல்லாம் வெறும் காசுக்கம்மா - அன்பு
காட்டுவது காலப் போக்குக் கம்மா

தன்னலந் தேடி விருந்திடுவார் - அவர்
சாதனை தோற்றிடில் உண்பதற்கு
முன்னரே மாற்று மருந்திடுவார்.........

தாய்மொழிக் கல்வியைக் கற்பதிலார் - அவர்
தம்மொழி கற்க நமை வருத்தி
வாய்மொழி பெற்று மகிழ்ந்திடுவார்

என்பன போன்ற பகுதிகள் இயற்றியவரின் உணர்வுக் கிறல்களைக் காட்டுகின்றன.

பொதுவாகப் பாடல்கள் ஓசைத் தட்டுப்பாடு இன்றியும் இவர்தம் ஏனையபாடலினும் சற்று செம்மை வாய்ந்தனவாகவும் காணப்படுகின்றன. காணப்படினும் முழங்குது, பார்க்குது, மூடுது முதலிய திருத்தமில் சொற்களும்; கசம், மகிதலம், சோகம், சிங்கம் முதலிய பல பிறமொழிச் சொற்களும் நூலின் பலவிடங்களினும் மலிந்து காணப்படுகின்றமை குறையாக உள்ளது.

—இறைக்குருவன்.

— புலவர். தி. நா. அறிவுஒளி.

# அகப்புரட்சி

**வா**ழ்க்கை சுமையாகி மக்களை மேன்மேலும் நசுக்கும் நிலை உருவாகி வருகிறது. எளிய வாழ்க்கை, அடக்கமான அமைதி வாழ்க்கை என்பதை இலக்கியத்திலோ, வரலாற்றிலோ, அன்றித் தொல்பொருட் காட்சி நிலையத்திலோ தான் உணரவேண்டிய நாட்கள் வந்து விட்டன. இந்நிலையை அரசியல், மன்பதை உருவமைவு, கயவர் திறமை, சான்றோர் கருத்துகளைப் போற்றுமை - ஏற்காமை ஆகிய நிலைமைகள் உருவாக்கி விட்டன. மக்கள் தாம் பின்னிய வலையில் தாமே விழுந்து தடுமாறிப் பொறிகலங்கித் தவிக்கின்றனர். கலை என்பதன் பெயரால் கயமை, ஒழுக்கக் கேடு, தீமை, பொய்மை, இழுக்கு நாடோறும் ஓம்பி வளர்க்கப் பெற்றுப் பரப்பப் பெற்று, அதன் காரணமாக மக்கள் உணர்வு மெலிவும், உண்மையில் நம்பிக்கையின்மையும், போலிவாழ்க்கையும், இருமனமும், இருநடத்தையும் மேற் கொண்டு சிக்கலுக்கு மேல் சிக்கலை அமைத்துக் கொண்டுள்ளனர்.

பெரியோர்கள் நெறிதவறி நடப்பவராக இருப்பதால் இளைஞரும் மாணவரும் முறையோ, வரையறையோ அற்றவர்களாய்ப் பண்புப்பற்றின்றி மனம் போன போக்கில் மதிகெட்டுத் திரிகின்றனர். இளமை வெறி, காம மனநோய், ஒழுக்கங்கெட்ட எண்ணம் பேச்சு நடத்தை

நெறிவாழ்வில் நம்பகமின்மை, அதிகாரவெறி, காசாவல், முறைபற்ற, போக்கு, ஆக்க நினைவின்மை, சோம்பல், பொழுது போக்கு வெறி பகுத்தறிவு மனப்பான்மையின்மை, அறவுணர்வுக் குறைபாடு ஆகிய வற்றின் கொள்கலங்களாகத் தான்தோன்றித் தனத்தோடு திரிகின் றனர். பழங்கருத்து, கொள்கை, பழக்கவழக்கங்களில் சில மூட நம் பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. அவை ஒழிக்கப்பட்டுப் புதுக்கருத்து, காலத்திற்கேற்கும் கொள்கை, இந்நாள் வாழ்வு நலனுக் கிசைந்த பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உண்டாக்கிக் கொள்ள வேண்டியது உயிருள்ள மன்பதைக்கு நனி இன்றியமையாததாகும்.

ஆயின் பழையமரபு - இன ஒழுகலாறு - தமிழறநெறி, அகத் திணை ஒழுக்கம், கற்பு, பண்பாடு முதலியவை மரபு மரபாகப் பேணிக் காத்துக் கடைப்பிடிக்கப் படுபவை. இவற்றில் புதுமைப் புரட்சி செய் வது மடமை மட்டுமன்று; கயமை மட்டுமன்று; அழிவுக்கு முயற்சி செய்தலுமாம். தன் மனைவி, தங்கை, மகள் இவரைப் பிறன் தீய நோக் கோடு காணல், நடத்தல் கூடாது எனக் கருதும் ஒருவன்; தான் மட் டும் பிறரிடம் தீய நோக்கோடு காணல்-நடத்தல்-முறையா? அறமா? பிறர்க்குரிய ஒழுக்கம் தனக்கும் உரியது என அறிதல் அன்றோ மெய் யறிவு? தனி வாழ்வுத் தவறுகளைக் கண்டிக்கு மளவுக்குப் பொதுவாழ் வுக் குற்றங் குறைகளைக் கண்டிக்கப் பெருந் தகுதியில் உள்ளோர் முதல் எவரும் முன் வராதது தமிழ்க் குமுகாயமே கோழைக் குமுகாயமாக மாறி விட்டது என்பதையன்றோ காட்டுகின்றது!

அறங்கூறவையத்தில் கையூட்டு, பரத்தைமைக் கையூட்டு அரசியற் செல்வாக்குக் கையூட்டு ஆகியவை பேராட்சி செய்கின்றமை யைக் கண்டிக்க வேண்டாவோ? அறத்துறையிலேயே அறக் கொலை மண்டிக் கிடந்தால் பிறதுறைகளைப் பற்றிக் குறைகூற ஒல்லுமா? காவல் துறையினைக் கைக்கூலித்துறை யென்றே வணிகர் வழக்காடுவோர் எள்ளிக்குறிப்பிடுகின்றனர்! இரட்டையர் சென்ற மிதி வண்டி வழக்கு தொட்டுக், கொலைவழக்கு வரை காவல் துறையில் கைக்கூலி வல்லாட்சி செய்கிறது. மருத்துவ நிலை யத்தில், மருத்துவர், அறுவையாளர், மருந்து கலப்போன், செவிலி, ஆயா பணியாள், பெருக்குவோன் முதலிய யாவரும் 'கிம்பளம்' பெறுமல் இருப்பதைக் கண்டதுண்டா? குறிப்பாகப் பெரிய அரசினர் மருத்துவ நிலையங்களில் வறியவர்க்கொரு முறையும் செல்வர்க்கொரு முறையும்

காட்டப் படுவது பெருங்கயமையாகும். பரிந்துரையுடன் வரும் நோயா ளிக்குக் காட்டப்படும் பரிவும் கவனிப்பும் ஏதிலார்க்கும் நடுநிலைக் குடும்பத்தினர்க்கும் காட்டப் படுவதில்லை. அழுது, கெஞ்சினாலும் இவர் கள்புறக்கணிக்கப் படுகின்றனர்; வெறுத்து இகழ்ந்துரைக்கப் படுகின் னர். இனைய அரக்கர்கள், மருத்துவராயும், மருந்தகப்பணியாளராகவும் வருவதை விடப் 'புலாற்கடை' யில் பிழைக்கச் சென்றிருக்கலாமே!

பொறியியலாளர், பொதுப் பெருவழித்துறை, அரசகரும அலுவல் துறைகள் எங்கும் காவலர், பணியாளர் கிம்பளத்தால் அடையும் வரு வாய் கல்லூரிப் பேராசிரியரின் சம்பளத்தையும் விட மிகுதியாகும் என அறியும் போது, மெத்தப் படித்து மேலான பணியாற்றுவதைவிட இக் குற்றேவலராகச் சென்று பொருளீட்டலாமே என நல்லோர் எண்ணு வதில் என்ன பிழையிருக்க முடியும் ? 'ஊழலை ஒழிக்க முடியாது' என்றே மேல் நிலையினரிலிருந்து பொது மக்கள் வரை பேசும் நிலை வந்து விட்ட தென்றால், மருந்து போட்டாலும் பயன்படாத அளவுக்குப் புண்அழுகிப்புரையோடி விட்டதென்பதன்றோ பொருள்? இழுக்கும், ஊழலும், குற்றமும், அறக்கொலையும் ஒழிக்கமுடியாத அளவுக்கு வேர் ஊன்றினால் அந்த நாடு உருப்படுமா? அம் மக்களினம் சிறப்புறுமா? அம் மண்பதை பண்புள்ளதாகுமா? அங்கு அறிவு வளர்ந்தது என்பது மெய்யா? அந் நாட்டு ஆட்சி செம்மையானது எனக் கூறல் பொருந் துமா? அங்கு அறிஞர்கள் நற்றொண்டு ஆற்றினர் என்பது ஏற்குமா? இந் நாட்டில் கலை செழித்தது என்பது அடுக்குமா? முறையா? இல்லை. இல்லை. இல்லை. நம் நாட்டறிஞர்கள் குற்றங்களுக்குக் கால் பிடிக்கும் அடிமையராகவும், அதிகாரிகளுக்கு வால் பிடிக்கும் கயவர்களாகவும், வயிற்றடியார்களாகவும் ஆகிவிட்டதால் நாடு, கேடுகளின் நிலைக்கள மாகி விட்டது!

தீமையைச் சொல்ல அஞ்சும் நிலை எவ்வளவு இழிவானது! கயமையைக் கண்டித்து எழுத அச்சப்படுதல் அறிவுக்கு எவ்வளவு பெரிய விழ்ச்சி?உண்மையை எடுத்துக்காட்ட, முரண்பாட்டை விளக்கி ஒளியூட்ட முடியாத நிலை அழுகல் நிலையே. ஆயின் அறக்கேடு நீடூழி இருப்பதில்லை! நோய்கள் நிலைப்பதில்லை. நோயை அழிக்க முடியா மற் போனால் உயிரை இழக்க வேண்டியதே. நல்ல குடும்பத்தினரும், குடிப் பெரியோர்களும் ஒழுக்க, நெறியுணர்ச்சிகளை இளமையினர்க்கு நன்முறையில் ஊட்டி வளர்க்கத் தவறுகின்றனர்.

நடிகை வயிறு தெரிய மேற்சட்டை அணிவதைக் கண்டிக்கும் ஒருவன் தன் மனைவி, உடன் பிறந்தாள், மகள் ஆகியோர்க்கு அம் முறை ஆடையுடுத்த உரிமை வழங்குதல் எதை யுணர்த்துகிறது? ஆகவே குடும்பத் தலைவர், பெரியோர் தம் வீட்டினர்க்கு அறிவுறுத் தித் திருத்துவது முதற்கடமை; பிறரைக் கண்டிப்பது அடுத்த சிறப் புக் கடமையாகும். பிள்ளைகளுக்கு ஆசிரியர்களும் பெற்றோருமே குறிப் பேடுகளை வாங்கிப் படிக்க வற்புறுத்தினால், அறிவு வளம் சிறக்குமா ? உலக நாடுகளின் அறிவு வளத்தோடு நம்நாட்டு மாணாக்கர் போட்டி யிட இயலுமா?

அலுவலகத்துப் பணிபுரியும் எழுத்தர் முதலியோரும் கடமையை முறைப்படி பொறுப்போடு செய்வதைவிட, பயன் எதிர்பார்த்தே பணி புரிகின்றனர். இத்தகு அழுகிய மனம் அமைந்ததற்குப் பொருள் முட்டுப்பாடும், மன்பதையின் இழிந்த நிலையும் காரணமாகும். ஏமாந்த ஓரிரு அதிகாரிகள், எழுத்தர்கள் மட்டும் 'ஊழலாளி'கள் எனச் சிறைப் பட்டு ஒறுப்படைகின்றனர். 'ஊழல் மன்னர்களும்', 'கையூட்டுவேந் தர்'களும் பெரிய நிலைகளிலிருந்து சிக்காமல் நலமே வாழ்கின்றனர் !

நம் நாட்டு வணிகர் மனம் பிரெஞ்சுப் புரட்சி போன்ற ஒரு பெரும் புரட்சி மூண்டாலொழியத் திருந்தாது போல் தோன்றுகிறது ! ஆம். கொள்ளையரின் மனப்பான்மை வாணிகர்க்கு அமைவது எத் துணை கொடியது! நேற்றை விலைக்கு இன்றை விலை மும்மடங்கு, நான்மடங்கு ஏறுவது வியப்பை யளிக்கிறது. விலையைக் கட்டுப் படுத்துவதில் அரசு தோல்வியுற்றது அரசின் கையாலாகாத தன் மையை மட்டுமின்றி,வாணிகர்க்கு அஞ்சும் கோழைத் தன்மையையுமே காட்டுகிறது. ஒரு நாட்டில் பெரும்பாலோர் ஆறுதலின்மை யுடையோ ரானால் அந் நாட்டின் பொதுவாழ்க்கை அமைதி குலையும். இன்று நாட்டிலே, மறியல், போராட்டம், உண்ணாநோன்பு, புரட்சி, எதிர்ப்பு, அறப்போர், கிளர்ச்சி, வன்முறைச் செயல், மாணவர் நடவடிக்கை, சட்டமீறல், ஊர்வலம் பூசல் ஆகியவை மலிந்துள்ளன. இவை அரசி னரின் தவறுகள் பெற்ற குழந்தைகளே!

'குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதே அரசுக்கு எதிரானது' என அரசினரும், கட்சியினரும் எண்ணுதல் வல்லாண்மைப் போக்கை நிலை நாட்டுவதாகும். குறையாய்வு திருந்த உதவும் என அறிவோடு

எண்ணி ஆய்ந்து திருந்துதல் ஆக்கந்தருவதாம். ஏழைகள், இரவலர், ஏதிலர் பற்றிப் போதிய கவனமும் கருத்தும் எந்நிலையினராலும் கொள்ளப்படாமை பெரிதும் இரக்கப்படுதற்குரியதாகும். நிகரமையும், பொதுவுடைமைப் பேச்சும், கூப்பாடும், கட்சியும் மட்டும் மக்கள் ஏழ்மை, வறுமைகளைக் களைந்துவிடா. கட்சி வளர்ச்சியே நோக்கமாக உடையோர் உண்மைத் தொண்டு செய்வதில்லை. தொண்டும் மக்களும் கட்சியைவிடவும், கட்சிக்கொள்கையை விடவும் உயரியன என எண்ணுவதே மக்கட் பண்பாடாகும். ஏழையர் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட ஆவன செய்வோரே எதிர்காலக் குமுகாய-அரசியல் அரங்கில் உயரிய மதிப்பையும் தகுதியையும் அடைவர்.

மக்கள் அறிவு நெறிப்பட்டு இயங்கத் தொடங்கினால் அரசையும், குமுகாயத்தையும் தம் வழிப்படுத்தலாம். மக்கள் அறிவுத் தெளிவும் ஆய்வுத்திறமும் உடையவராக அறிஞர் தம் பணி உருவாக வேண்டும். நாடு, சுடுகாடாக ஆகாமல் காத்துப் பேரின்பவீடாக்க வேண்டுமானால் தமிழறிஞர்கள் பொதுப்பணித்துறைகளில் பல்லாற்றானும் ஈடுபட்டு உழைக்கவேண்டும். தனிவாழ்வும் தனி நலமும் பேணி பொதுவாழ்வைப் புழுத்தழியச் செய்தல் சான்றோர்க்குரிய தகுதியன்று. மோழையரும் கோழையரும் ஏழையரும் மலிந்த நம்நாடு சீரியரும் அறிஞரும் மிகுந்த நாடாக வேண்டுமானால் அகப்புரட்சி மிக வேண்டும். குறைகள் களையப்படுதல் மிக இன்றியமையாதது. செவ்வியோர் சிறப்புறல் கட்டாயமாகும்; மக்களின் தெளிந்த அறிவோட்டம் விளக்கமுறல் நனி இன்றியமையாததாம். O

---

## எந்தமிழ்க்கே இவ்வுலகு !

–'நன்முல்லை' விரியூர்.

செந்தமிழில் மூச்சடக்கித் தீந்தமிழி லேவளர்ந்து
பைந்தமிழ்க்கே வாழும் பெருநெஞ்சே! – முந்தியதாய்த்
தென்றமிழ் நாட்டின் சிறுவர்க்கும், பெண்டிர்க்கும்
வென்றிக் கொடியுயர்த்தும் வன்மையர்க்கும் – குன்றாத்
தமிழுணர்வை யூட்டித் தமிழ்த்தலைமை தாங்கக்
குமிழிடும் கொள்கையைக் கீண்டி, – இமைப்பொழுதும்
ஓயாக் கனல்கொளுவி, உண்மையிலா யிவ்வரசின்
சாயாச் செவிப்பறையைத் தீய்த்திட்டு – மாயாப்
படைத்திறத்தா லிந்திபத்தைப் போக்கிவிட்டு, நந்தாய்ப்
படைத்தலைமைக் கீழிருந்து, பண்டைத் – தடையெறிந்த
மூவேந்தர் கோன்முறைமை மாந்தர்தம் வாழ்வேந்தப்
பாவேந்தி வாழ்வுயர்த்துஞ் சூளுரையை – நாவேந்தி
முந்திடுவாய்! சென்றே முரசறைவாய்! எஞ்ஞான்றும்
எந்தமிழ்க்கே யிவ்வுலகம் என்று ! O

# பாட்டரங்கம்

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி னுலென்ன ?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு !

---

## ஒற்றுமையை(!) வளர்க்கின்றீர்கள் ?

–மணிவேலன்

வாய்நோக நாவரள ஒருமைப் பாட்டை
வழவழென நாளெல்லாம் பேசிப் பேசி
மாய்மாலம் பண்ணுகின்ற அமைச்சன் மாரே !
மனமென்ற ஒன்றுண்டோ உமக்குச் சொல்வீர்?
ஏய்த்திடவே ஒருகண்ணில் வெண்ணெய் வைத்தே
இன்னென்றில் சுண்ணும்பை எதற்கோ வைப்பீர்?
தாய்நாட்டின் பெருமைகளைப் படம்பி டித்துத்
தரும்செய்திப் படத்தினிலே பிளவு ஏனே ?

வடநாட்டுச் சிற்றூரில் புதுமை யின்றி
வாழ்கின்ற பழங்குடிகள் ஆடல், பாடல்
இடம்பெறவே படமெடுத்துக் காட்டு கின்றீர் !
இன்றுமவர் ஆடையணி பண்பா டெல்லாம்
மடமடெனப் படமெடுத்துக் காட்டு கின்றீர் !
மலைவாழ்வோர் நிலைகாட்டி மகிழ்கின் றீர்கள்!
இடமிலையோ தென்னாட்டுக் குடிகட் கெல்லாம்?
இதுதானோ ஒற்றுமையை வளர்க்கும் நேர்த்தி ?

வேங்கடத்தின் வடக்கினிலே 'இராம லீலா'
விளையாடும் 'ஓலி' இன்றும் விழாக்களெல்லாம்
தாங்கிவரும் படச்சுருளில் 'பொங்கல்' எங்கே ?
தையலர்கள் அடிக்கின்ற 'கும்மி' எங்கே?
வீங்கியெழு தோள்புடைக்கக் கொம்புக் காளை
விரட்டுகின்ற காட்சியெலாம் எங்கே? எங்கே ?
'தேங்கிநிற்கும் வெள்ளந்தான் தமிழர் நாடு!
தெரியுமடா அணையுடைந்தால் பிறகு செய்தி?'

ஏருழுது கொண்டிருக்கும் உழவன் வாயில்
இனிப்பொழுகத் தென்பாங்கு பாடும் காட்சி;
தேருழுது செல்கையிலே விழாவைக் காணத்
திரள்கின்ற தமிழ்மகளிர் காட்சி; பெண்ணாள்
மாருழுத நினைப்பெண்ணி விரிந்த மார்பை
மகிழ்வோடு நிமிர்த்திச்செலும் இளைஞர் காட்சி;
யாரழுது கேட்டாலும் காட்ட மாட்டீர் !
இதுதானோ ஒற்றுமையை வளர்க்கும் நேர்த்தி ?

தென்னாட்டுப் படிமங்கள் காட்ட மாட்டீர் !
தென்னாட்டுப் பாவலரைப் புகழ மாட்டீர் !
தென்னாட்டுப் பெரியோர்க்கு விழாவெ டுத்தால்
திரைச்சுருளில் படம்பிடிக்க ஒப்ப மாட்டீர் !
தென்னாட்டின் அரசியலில் விளங்கும் பேரைத்
திரைப்படத்தில் ஒருபொழுதும் எடுக்க மாட்டீர் !
இன்னபடி வேற்றுமையை வளர்த்துக் கொண்டே
இந்நாட்டின் ஒற்றுமையை(!) வளர்க்கின் றீர்கள்! O

## உள்ளம் நேர்வாய்

–காரை. கோ. பாரதி. காரைக்கால்.

பணத்திற்குத் தன்மானம் பலியிட்டுப்
பசுந்தமிழைத் தீய்க்கும் மூடர்
பிணத்திற்கு நாய்கூடப் பெரிதுவந்து
நிற்காது, தமிழா, தீயர்
கணக்கிற்குக் காவாகிக் கடைசிவரை
களங்கத்தில் கழிவ தற்கோ
நிணத்திற்கு வாய்பிளந்து நிற்கின்ற
நாயடிமை பூண வந்தாய் !

இரக்காத பூந்தமிழில் இல்லாத
இன்பொருளும் எதிலே உண்டு?
மறக்காத தன்மான மறவர்க்கு
மகளன்றோ தமிழ்தான் பண்டு,
நிரக்காத இந்திக்கு நிழல்தந்து
நிற்போனே, நீயே ஓர்வாய்
சுரக்காத பொய்யூற்றுச் சுவைக்காது
சூதுக்குச் சுருள்வ தேனோ ?

புல்லுக்கு நீர்வார்த்துப் பொன்னுக்கும்
பொருளுக்கும் புகழை விற்றால்
கல்லுக்கு நேராகிக் கல்லாரும்
கருதாத கயவ னுவாய் !
மல்லுக்கு வரும்இந்தி மண்கவ்வ
மார்தட்டின் பெருமை சேர்ப்பாய்
வெல்லாது தமிழெனின்உன் சொல்லுக்குத்
தடையிதனை விரைந்து நேர்வாய் O

## உறக்கம் கொள்ளேன்

–இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.

இரு வழக்கில் ஒன்று, படச் செயலற்றுக்
கிடக்கின்ற வட மொ ழிக்குப்
பெரும் பணத்தைச் செலவிட்டுப் புதைகு ழிக்குப்
போவதனைத் தடுத்துக் காப்போர்

இருவழக்கும் பெருவழக்காய் இலங்கு தமிழ்
நலமழிக்க முனைந்து வேரோ
டுருக் குலையச் செய்வதனை அழிக்கும் வரை
கண்ணுறக்கம் சிறிதும் கொள்ளேன்.

தமிழர்க்குள் விளைந்திருக்கும் உட்பகையும்
தாங்கவொணுத் துயர் விளைத்துத்
தமிழ்க்குள்ள பெருமாண்பை அழித் தொழிக்கும்
வடவர்கொடும் பகையும் வென்று
தமிழாய்ந்த நன்மகனை நாடாள,
முதலமைச்சாய் அமர்த்தி வைத்துத்
தமிழ் வாழ்வும் தமிழர்க் கென் றுறுவாழ்வும்
காணும் வரை உறக்கம் கொள்ளேன்.

பெற்ற தமிழ் மொழிப்பற்றும் இனப்பற்றும்
புகழாரும் நாட்டுப் பற்றும்
விற்றுவிட்ட பொருளாக இழந்தழியச்
செய்பகைஞர் சூழ்ச்சி வீழ்த்தி
கற்றுணர்ந்த வழிஒழுகி இயற்கையோ
டிணைந்திங்கு வாழ்வு காண
நற்றமிழர்க் குழைத்தி ருப்பேன் விழித்திருப்பேன்
கண்ணுறக்கம் சிறிதும் கொள்ளேன்.

வண்டமிழர் இனமிந்த உலகுக்கே
தனியினமாய் வளர்ச்சி பெற்று
நுண்கலைகள் பலவாய்ந்து வல்லறிவால்
நன்மக்கள் உலகத்துக்கே
எண்ணரிய பெரும் பொறிகள் உண்டாக்கி
ஈந்திருக்கும் நாளைக் காண
தொண்டுபல செய்திங்கு வாழ்ந்திருப்பேன்
கண்ணுறக்கம் சிறிதும் கொள்ளேன். O

## வெட்கக் கேடு!

—அரி. இல. தமிழடியான்.

ஆட்பட் டிருந்ததுபோதும் தமிழா இது
நாளும் – துயர்
நீளும் – இனி

ஆட்டிப் படைப்போர் கேட்டினை மாய்க்க எழுகஉன்
தோளும் – மற
வாளும்.

நாட்டினை யாண்டார் நந்தமிழ் முன்னோர்
அன்று – கடலும்
சென்று – அவர்

காட்டிய நன்மறம் வீழ்ந்து சிதைந்ததோ
இன்று – செல்
தின்று.

நாயினும் கடையராய், நரியினும் இழிந்தராய்
இங்கு – பொல்
லாங்கு – செய்து

நாட்டினில் உலவிடும் நன்றி கொன்றோர் உயிர்
வாங்கு – புகழ்பெற்
றோங்கு.

தாய்க்கோ விலங்கு ? தமிழ்க்கோ விலங்கு ? நீ
சொல்வாய் – ஆர்த்துச்
செல்வாய் – முன்னே

தடையென மலையே எதிர்நின்ற போழ்தும்
வெல்வாய் – உயிர்
கொல்வாய். O

## திரைப்படம் !

க. கணேசன், பொறையாறு.

நடிகையரின் மேலழகை நாளும் மெச்சி,
நடக்கின்றார் திரையரங்கம் சலிப்பே யின்றி;
அடிபட்டும் மிதிபட்டும் திரைப்ப டத்தை,
அயராது பார்க்கின்றார் உடற்க வர்ச்சி;
துடிக்கின்ற இளமைக்குத் தீனி யாகத்
துணைசெய்யும் தாளிகைக்கு கணக்கே யில்லை;
பிடிக்கின்ற பிடியினிலே குரங்கைப் போலப்
பிடித்தபடம் என்றிளித்துத் தாவு கின்றார்;

தீதுதரும் திரைப்படத்தின் காட்சி யெல்லாம்,
தீஞ்சுவைசேர் பாவியத்தின் மாட்சி யென்று;
கோதுடைய திரைச்சுவைஞர் கூவு கின்றார்;
கோணல்மிகு பண்புகளால் தீமை சேரும்

காதினிலே மோதுமிசைத் தட்டின் பாட்டு
கருத்துள்ளோர் உளங்களையே உடைக்கும் வேட்டு!
நேர்திறத்துச் சான்றோர்நன் னூலின் பாட்டு
நெஞ்சத்தை நெகிழ்விக்கும் இன்பக் கூட்டு.

உள்ளத்தை வலுப்படுத்தும் தேர்ந்த உண்மை.
உயர்வாகப் பெறுதற்குப் பாதை கண்டு
கள்ளத்தைக் கக்குகின்ற திரைப்ப டத்தைக்
காணாது விலக்குகின்ற பண்பு வேண்டும்
அள்ளுசுவைப் பாவியத்தில் ஆழ்ந்து தோய்ந்தே
அரியபெருங் கதைகளிலே நெறியறிந்து
கொள்ளையின்பம் கொண்டுலவ உலகில் உண்மைக்
கொள்கைகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும். O

## பயனில்லார் பொருள்

–கோனூர் 'குயிலொலியன்'

விளையும் பயிர்களினை வீணாக்கும், நச்சுக்
களையின் வளர்ச்சியினைக் காட்டும் – வளையின்
அடியில் இருக்கும் அரவம்போல், தீயர்
பிடியில் இருக்கும் பொருள் !

எட்டி மரமும் இருங்கிளைகள் தாம்பரப்பி
அட்டி இலாதுதரும் ஆய்நிழலே – பெட்டி
நிறைந்திருக்கும் மாப்பொருளோர் கீழ்மை மனமோ
மறைந்திருக்கும் வெம்புலிபோல் காய்ந்து !

உழைக்கும் தொழிலாளர் ஊதியத்தில் வாழ்ந்து
தழைக்கும் மரம்போல் தழைத்துப் – பிழைக்கும்
கயவர் பணத்திற்குக் காப்பாவார் அன்னார்
பெயரோ விளங்கும் பெரிது !

பொங்கும் கடலோ பொழியும் மழையோடு
சங்கும் எழில்முத்தும் தந்துதவும் – தெங்கின்
நறுநீர்போல் பேசும் நரிகள் பொருளோ
துறுநீர்போல் தூங்கும் துவைந்து !

கொதிக்கும் உலையோ கொடுக்கும் உணவு
மிதிக்கும் நிலமோ விளையும் – பதிக்கும்
கொடியோ மலரும், கொடியோர் பொருளால்
குடியா வளரும் குளிர்ந்து ? O